Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 6-00

கூடர்10வள்ளுவர்ஆண்டு2026 புரட்டாதி28 ஞாயிற்றுக்கிழமை(15-10-1995)UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 326

ஸ்ரீலங்கா அரசு மீது சர்வதேச அழுத்தம் கொடுத்து

# யாழ். மக்களின் அவல நிலையை நீக்குமாறு ஐ.நா. சபைக்கு மனு

## பேச்சுவார்த்தை அவசியமென பிரசைகள் குழு வற்புறுத்து

யாழ்ப்பாணம், ஒக்டோபர். 15

ஸ்ரீலங்கா அரசாங்கத்தின் இராணுவ நடவடிக்கைகளினால் யாழ்ப்பாணக் குடாநாட்டு மக்களுக்கு ஏற்படும் அழிவுகள், அவலங்களை நீக்குமாறு —

ஐக்கிய நாடுகள் சபைக்கு யாழ். பிரசைகள் குழு மனு ஒன்றை அனுப்பி வைத்துள்ளது.

இனப் பிரச்சினைக்கு பேச்சுவார்த்தை நடத்தி அரசியல் தீர்வு ஒன்றைக் காணுமாறும், பொருளாதாரத் தடையை நீக்குமாறும் ஸ்ரீலங்கா அரசுக்கு அழுத்தம் கொடுக்குமாறும் —

யாழ். பிரசைகள் குழு இம்மாதம் ஐந்தாம் திகதியிட்டு ஐ. நா. செயலாளர் திரு பூட்ரஸ் பூட்ரஸ் காலிக்கு அனுப்பிய மகஜரில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

அந்த மகஜரில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

ஸ்ரீலங்கா பாதுகாப்புப் படைகள் மேற்கொண்டுள்ள பெரும் இராணுவ தாக்குதல் நடவடிக்கையின் விளைவாக யாழ். குடாநாட்டில் மிகக் கொடூரமான — ஆபத்தான — நிலை தோன்றியுள்ளதோடு பொதுமக்கள் சமூகத்தில் பெரும் அழிவு விளைவுகளும் ஏற்படும் நிலை தோன்றியுள்ளது.

★ மக்கள் குடியிருப்புப் பகுதிகள் மீது ஸ்ரீலங்கா பாதுகாப்புப் படைகள் நடத்தும் கண்மூடித்தனமான குண்டு வீச்சு மற்றும் ஷெல் தாக்குதல்களினாலும் —

★ உணவு, எரிபொருள், உரம் மற்றும் மருந்துப் பொருள்கள் உட்பட பல அத்தியாவசியப்பொருள்களை எடுத்துச் செல்வதற்கு விதிக்கப்பட்டுள்ள கட்டுப்பாடுகளினாலும் —

(7 ஆம் பக்கம் பார்க்க)

### லொறி மோதி நால்வர் காயம்

சாவகச்சேரி, ஒக். 15

இராணுவத் தாக்குதலுக்கு அஞ்சி இடம்பெயர்ந்து மட்டுவில் மகா வித்தியாலயத்திலும் மற்றும் வேறு பகுதிகளிலும் தங்கியிருந்தவர்களில் நால்வர் நேற்று நுணாவில்— கனகன் புளியடிச் சந்தியில் நடைபெற்ற லொறி விபத்தில் காயமடைந்தனர்.

வீதியால் வேகமாக வந்து கொண்டிருந்த லொறி வீதியில் நின்றவர்களை மோதியதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இச் சம்பவத்தில் மூன்று சைக்கிள்களும் சேதமடைந்தன. [இ-31]

### வலி. வடக்கில படையினர் சூடு இளைஞன் காயம்

யாழ்ப்பாணம், ஒக். 15

வலிகாமம் வடக்கில் படையினர் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் இளைஞர் ஒருவர் காயமடைந்தார்.

நேற்றுக் காலை நடந்த இச் சம்பவத்தில் காயமடைந்தவர் சண்டிலிப்பாயைச் சேர்ந்த 20 வயதான மா. தியாகராசா என்று தெரிவிக்கப்படுகிறது. (இ-4)

### படையினர் வைத்த குண்டு சிறுவன் காயம்

யாழ்ப்பாணம், ஒக். 15

திருகோணமலையில் படையினரினால் வைத்துச்செல்லப்பட்ட குண்டு ஒன்று வெடித்ததில் 8 வயதான ரஞ்சித்குமார் என்ற தமிழ் சிறுவன் படுகாயமடைந்தான்.

திருகோணமலை சாகிப் நகர் என்ற இடத்தில் இட

(8 ஆம் பக்கம் பார்க்க)

### கண்ணி வெடியில் சிக்கிய படையினர்

யாழ்ப்பாணம், ஒக் 15

மணலாறில் கண்ணிவெடியில் சிக்கி ஸ்ரீலங்கா இராணுவத்தினர் மூவர் காயமடைந்தனர்.

நேற்று முன்தினம் இச்சம்பவம் இடம்பெற்றது (இ-4)

புலிகளின் தாக்குதலுக்கு இலக்கான

### கல்குடா பொலீஸ் நிலைய பொறுப்பதிகாரி நீக்கம்!

கொழும்பு, ஒக். 15

அண்மையில் விடுதலைப் புலிகளின் திடீர் தாக்குதலுக்கு இலக்கான கல்குடா பொலீஸ் நிலைய பொறுப்பதிகாரி சேவையில் இருந்து நிறுத்தப்பட்டிருக்கிறார்.

கல்குடா பொலீஸ் நிலைய தாக்குதலின் போது திருப்திகரமாகச் செயற்படவில்லை என இவர் மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

பொலீஸ் மா அதிபர் டபிள்யூ பி. ராஜகுருவின் பணிப்புரையின் பேரில் இவர் சேவையில்இருந்து இடைநிறுத்தப்பட்டுள்ளார். (ஐ)

## டக்ளஸை பாதுகாப்பது எமது பொறுப்பு அல்ல

### பொலீஸார் தெரிவிக்கின்றனர்


கொழும்பு, ஒக். 15

ஈ.பி.டி.பி. தலைவர் டக்ளஸ் தேவானந்தாவுக்கு பாதுகாப்பு வழங்க வேண்டிய தேவை தமக்கு இல்லை என ஸ்ரீலங்கா பொலீஸார் தெரிவித்துள்ளனர்.

டக்ளஸ் தேவானந்தா மீது கொழும்பில் தாக்குதல் நடத்தப்பட்ட போது, பொலீஸார் பாதுகாப்புத் தரவில்லை என ஈ.பி.டி.பியினர் குற்றம் சாட்டி இருந்தனர்.

இதற்கு பதிலளித்த கொழும்பு பிரதிப் பொலீஸ் மா அதிபர் கட்டுகஸ்தெனியா டக்ளஸ் தேவானந்தாவுக்கு பாதுகாப்பு வழங்க வேண்டிய தேவை தமக்கு இல்லை என தெரிவித்துள்ளார் என கொழும்பு தமிழ் நாளிதழ் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

(ஐ)



பாண் எப்போது வரும் என்று ஆவலுடன் சின்னஞ் சிறுவர்கள் முதல் முதியவர்கள் வரை குடா நாட்டில் வெதுப்பகங்களின் முன்னால் நாளாந்தம் காலையும் மாலையும் தவம் கிடக்கின்றனர். சிறுவர்கள், ஆண்கள், பெண்கள் நேற்றுக் காலை நகரில் வெதுப்பகம் ஒன்றின் முன்னால் வரிசையாக நின்ற போது இப்படம் எடுக்கப்பட்டது.

## டாக்டர்கள் நாளை முதல் வேலைநிறுத்தம்!

கொழும்பு, ஒக். 15

அரசாங்க வைத்திய அதிகாரிகள் நாளை திங்கட்கிழமை முதல் தொடர்ந்து வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபடவுள்ளனர். அரசாங்க வைத்திய அதிகாரிகள் சங்கம் இது பற்றி அறிவித்திருக்கிறது.

இதேவேளை — டாக்டர்களின் இந்த வேலை நிறுத்தம் தொடர்பாக அரசாங்க வைத்திய அதிகாரிகள் சங்கத்துக்குள் பிளவு ஏற்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த வேலை நிறுத்தம் நியாயமற்ற கோரிக்கைகளின் பேரில் நடத்தப்படுவதாகக் கூறி சங்கத்தின் செயலாளர்

[8 ஆம் பக்கம் பார்க்க]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புதிய பெரடெனியா இன்ஸ்ரிரியூட்

கே. கே. எஸ். வீதி, கொக்குவில்

**துரித மீட்டல் வகுப்புக்கள்**

கணிதம் விஞ்ஞானம்

(வலிகாமம், யாழ்ப்பாணம் புகழ் பூத்த ஆசிரியர்கள்)

கணிதம் :- இரா. அருட்செல்வம்
விஞ்ஞானம் ;- இரா. செல்வவடிவேல்

கணிதம் (திங்கள், வெள்ளி 6-00 மாலை)
விஞ்ஞானம் (சனி, ஞாயிறு 6-00 மாலை)

நடைபெறுகின்றன

(சி-2479)



**அறிவித்தல்**

நாளை திங்கட்கிழமை 16-10-95 காலை 9 மணிக்கு யா / ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாலய மாணவர்கள் சரசாலை சரஸ்வதி வித்தியாசாலைக்கு சமுகம்தரவும்

அதிபர்

(39020)



பருத்தித்துறை நகரசந்தை மாட்டிறைச்சிக்கடைக்கான

**கேள்விகள்**

மேற்படி கடைக்கான கேள்விகள் எதிர்வரும் 20/10/1995, காலை 10 மணி வரை தமிழீழ நிர்வாக சேவையின் உள்ளூராட்சிப் பகுதியில் ஏற்றுக் கொள்ளப் படும். மேலதிக விவரங்களிற்கு வழமையான அலுவலக நேரங்களில் தமிழீழ நிர்வாக சேவை நடுவப் பணியகத்துடன் தொடர்பு கொள்ளுமாறு தமிழீழ நிர்வாக சேவைப் பொறுப்பாளர் அறிவித்துள்ளார்

(சி/2478)



**DIPLOMA IN COMPUTER PROGRAMMING**

BASIC LANGUAGE

ஆரம்பம்: 21 - 10 - 1995

★ சிறந்த விரிவுரையாளர் குழு
★ கூடிய செய்முறைப் பயிற்சியும் தவணை முறைக் கட்டண வசதியும்.
★ சிறந்த மாணவர்களுக்கு மூன்று மாத காலம் இலவச உள்ளகப் பயிற்சி அளிக்கப்படும்.

விவரங்களுக்கு:

NORTH CEYLON TECHNICAL INSTITUTE
14 st. Peter's Lane,
Jaffna.

(சி-2473)



**ACCOUNTANCY EXAMS MAY - JUNE 1996**

C. I. M. A. Stage I
I. A. B. சகல பிரிவுகளும்

ஆரம்பம்: 28 - 10 - 1995

விவரங்களுக்கு:

NORTH CEYLON TECHNICAL INSTITUTE
14, St. Peter's Lane,
JAFFNA.

(2478)


# துப்பாக்கிச் சூடு இடம்பெற்றபோது பின்பக்கமாக ஓடித் தப்பிய டக்ளஸ்

கொழும்பு, ஒக். 15

"சம்பவதினம் பூட்டியிருந்த எனது அறையின் கதவின் கைப்பிடிக்குமிழை நோக்கிச் சுட்டனர். தாக்குதலில் இருந்து தப்புவதற்காக பின்பக்கமாக ஓடி அடுத்த வீட்டுக்கு சென்று விட்டேன்.

நடந்த தாக்குதல் குறித்து ஈ. பி. டி. பி] தலைவர் டக்ளஸ் தேவானந்தா மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தமது இல்லத்தில் நடந்த தாக்குதல் குறித்து அவர் விவரிக்கையில் மேலும் கூறியதாவது:-

என் இல்லம் மீது தாக்குதலை நடத்தி எனது மெய்ப்பாதுகாவலர்களை சுட்டுக் கொன்றவர்களில் சிலர் ராணுவ உடையில் காணப்பட்டனர். சிலர் வெள்ளை மேற்சட்டை அணிந்திருந்தனர்.

ஐந்து அல்லது ஆறு பேர் கொண்ட கோஷ்டியே இத்தாக்குதலை நடத்தியது.

இரவு 10-00 மணியளவில் எனது வீட்டின் மேல் மாடியில் நான் இருந்தேன்.

அச்சமயம் கட்டடத்தின் கீழ்மாடியில் துப்பாக்கி வேட்டுச்சத்தம் கேட்டது. மெய்ப்பாதுகாவலரின் துப்பாக்கி தற்செயலாக வெடித்திருக்கலாம் என நினைத்தேன்

தொடர்ந்து தன்னியக்க துப்பாக்கி வேட்டுச் சத்தங்கள் கேட்டன.

இதனைத் தொடர்ந்து ஏதோ அசம்பாவிதம் நடக்கிறது என நினைத்து தற்பாதுகாப்புக்காக எனது அறையில் இருந்த மின்குமிழை சுட்டு விளக்கை அணைத்தேன். பின்பு சுற்றியுள்ள மின்குமிழ்களுக்கு குறி வைத்தேன்.

துப்பாக்கி நபர்கள் சுட்டுக் கொண்டே கட்டடத்துக்குள் நுழைய முற்பட்டனர். கேற் வாசலில் நின்ற மெய்ப்பாதுகாவலர்கள் எதிர்த்தாக்குதல் நடத்திய போது அவர்கள் இருவரும் சூடுபட்டு இறந்து விட்டனர்.

துப்பாக்கி நபர்கள் மேல் மாடிக்குவரமுயன்றனர். மேல் மாடியில் இருந்த மெய்ப்பாதுகாவலர் ஒருவர் அவர்களை நோக்கிச் சுட்டார்.

அவர் தனது மகஸின் முடியும் வரை சுட்டார். சுவர் மறைவில் இருந்து துப்பாக்கி நபர்கள் சுட்டதால் மெய்ப்பாதுகாவலர் இறந்தார்.

தொடர்ந்து மேல்மாடிக்கு வந்தவர்கள் பூட்டியிருந்த எனது அறையின் கதவின் கைப்பிடிக் குமிழை நோக்கிச் சுட்டனர்'

தாக்குதலில் இருந்து தப்புவதற்காக பின்பக்கமாக ஓடி அடுத்த வீட்டுக்கு சென்று விட்டேன் —

இப்படி அவர் கூறினார்.

## உடுவிலில் பாதுகாப்புநிதி சேகரிப்பு

யாழ்ப்பாணம், ஒக். 15

உடுவில் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் நாளை திங்கட்கிழமை உரும்பராய் அன்னை பூபதி கலை அரங்கத்தில் பிற்பகல் 3 முதல் 5 மணி வரை—

புன்னாலைக்கட்டுவன் ஜே/207, ஜே / 208, ஜே / 209, குப்பிளான் ஜே / 210, ஜே/211, சுன்னாகம் ஜே / 195, ஜே/196, கிராமசேவையாளர் பிரிவுகளைச் சேர்ந்தவர்களிடமிருந்து பாதுகாப்பு நிதி சேகரிக்கப்படும். [க]

## மனையியல் பயிற்சிநெறி நாளை ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஒக். 15

யாழ். மனித முன்னேற்ற நிலைய மனைப் பொருளியல் பயிற்சி நிலையத்தில் மனைப் பொருளியல் டிப்புளோமா பயிற்சி நெறி நாளை திங்கட்கிழமை முதல் ஆரம்பமாகிறது.

ஒன்பது மாதங்கள் நடைபெறும் இந்த இலவச பயிற்சி நெறியில் ஜி. சீ. ஈ சாதாரண தரத்தில் 5 பாடங்களில் சித்தியடைந்த இளம் பெண்கள் சேர்த்துக் கொள்ளப்படுவர்.

## அத்தியார் இந்துக் கல்லூரி

நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரி நாளை திங்கட்கிழமை முதல் வழமை போல் இயங்கும் என்று கல்லூரி அதிபர் திரு. வீ. கணேசராசா அறிவித்துள்ளார்.

அன்றைய தினம் காலை 10-00 மணிக்கு கல்லூரி அபிவிருத்திச் சங்க, பழைய மாணவர் சங்க நிர்வாக உறுப்பினர்களுக்கும், நலன் விரும்பிகளுக்கும் விசேட கலந்துரையாடல் ஒன்றும் அங்கு நடைபெற உள்ளது. (ஓ-3)

## கோப்பாயில் பாதுகாப்பு நிதி சேகரிப்பு

யாழ்ப்பாணம், ஒக். 15

கோப்பாய் பிரதேச செயலகத்துக்கு உட்பட்டவர்கள் தங்களால் பங்களிப்புச் செய்ய நிச்சயிக்கப்பட்ட தேசிய பாதுகாப்பு நிதியை எதிர்வரும் 21 ஆம் திகதி சனிக்கிழமை கோப்பாய் தேசிய பாதுகாப்பு நிதி தொடர்பகத்தில் செலுத்தி ஒத்துழைக்குமாறு கோப்பாய் வட்ட அரசியல் துறையினர் அறிவித்துள்ளனர். [ஐ]

## கோப்பாயில் இடம் பெயர்ந்த ஆண்டு 11 மாணவர்கள் கல்வியை தொடர வசதி

கோப்பாய் கல்விக் கோட்ட பாடசாலைகளில் இருந்து இடப்பெயர்ந்துள்ள ஆண்டு 11 இல் கல்வி கற்கும் மாணவர்கள் தற்போது தங்கியுள்ள இடங்களிலேயே கல்வியைத் தொடர வசதி செய்யப்படவுள்ளது.

இவ்வாறு தற்போது தங்கியுள்ள இடங்களிலேயே கல்வியைத் தொடர விரும்பும் ஆண்டு 11 மாணவர்களை நாளை திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு சாவகச்சேரி இந்துக் கல்லூரி, மட்டுவில் மகாவித்தியாலயம் கோப்பாய் மகாவித்தியாலயம் ஆகியவற்றில் ஒன்றுக்கு சமுகமளிக்குமாறு கோட்ட கல்வி அதிகாரி அறிவித்துள்ளார்.

அத்துடன் ஆண்டு 11 மாணவர்களுக்கு கல்வி போதிக்கும் இடம்பெயர்ந்த ஆசிரியர்களையும், அதிபர்களையும் மேற் குறிப்பிட்ட பாடசாலைகளில் ஒன்றுக்கு சமுகமளிக்குமாறும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)


**O/L மீட்டல் வகுப்புகள்**

ஆரம்பமாகியுள்ளன

சமூகக்கல்வி :-
திரு.M. இக்னேசியஸ்
B. A. (Hons)

O/L Day class

ஆண்டு 10, 9 வகுப்புகளும் நடைபெறுகின்றன.

SHAMROCK
யாழ். சுண்டுக்குளி

(39017)



D M I
233, ஸ்ரான்லி வீதி யாழ்.

96 DAY CLASS

(பரீட்சை எடுத்தவர்களுக்கு)


கணக்கியல்
பிரிவு II

ஆரம்பம் 17-10-95
மதியம் 12 மணி

ஆசிரியர்
D. SAM

(39019)





**எஸ்-எம்-பெர்ஜன்டோ**

ஆதரவில்

யாழ். மிட்ரவுண் றோட்டறக்ற் கழகம் நடத்தும்

**கிறிக்கெட் சுற்றுப் போட்டி**

இன்று காலை 8 00 மணி முதல் கால் இறுதி, அரையிறுதி ஆட்டங்களும் மாலை 4 00 மணி முதல் இறுதி ஆட்டமும் யாழ். இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெறும்.

அனைவரும் வருக!

செயல் திட்ட இயக்குநர்
மிட்ரவுண் றோட்டறக்ற் கழகம்

(சி/2480)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாணைச் சாப்பிடப் பழகிவிட்டதால்
# தமிழீழ மக்கள் 'கியூ'வில் நிற்கும் பரிதாபம்!

மா இல்லை. போதியளவு மா யாழ்ப்பாணக் குடாநாட்டுக்கு அனுப்பப்படவில்லை. ஆகவே பாண் உற்பத்தியும் இல்லை. அல்லது குறைவான பாண் உற்பத்திதான் நடைபெறுகிறது.

ஓரிரண்டு இறாத்தல் பாணைப் பெற அதிகாலையிலேயே "கியூ"வில் நிற்க வேண்டிய நிலைமை யாழ்ப்பாண மக்களுக்கும் ஏற்பட்டிருக்கிறது.

"குடுகுடு கிழவர்" கிழவிகளும் சின்னஞ்சிறு குழந்தைகளும் காலையும் மாலையும் வெதுப்பகங்களுக்கு முன்னாலும் கடைகளுக்கு முன்னாலும் காத்து நிற்கும் காட்சியை இப்பொழுது எங்கும் காணக் கூடியதாக இருக்கிறது

மழை காலத்தின் வருகையும் பாணின் தேவையை அதிகரித்து "பாண் நெருக்கடி"யைக் கடுமையாக்கியுள்ளது.

இதே வேளை, பாண் விலையை சந்திரிகா அரசாங்கம் உயர்த்த இருக்கிறது என்ற செய்தியும் வெளிவந்து நாடு முழுவதிலும் பெரிய எதிரொலிப்பை எழுப்பியுள்ளது. குறிப்பாக சிங்களவர் மத்தியில் பாண் விலை உயர்வால் அரசியல் குழப்பமே ஏற்படலாம் எனப்படுகிறது.

பாணும் அரசியலே

அரிசிதான் இலங்கை அரசியல் என்று ஒரு காலம் இருந்தது. பின்னர் பாணும் அரிசியுடன் சம இடத்தை அல்லது அதிலும் கூடுதலான இடத்தைப் பிடித்துக் கொண்டது.

பயங்கரக் கனவு

பாண் பிரச்சினையே ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியையும் சிறிமாவோ பண்டாரநாயகவையும் 15 ஆண்டுகளுக்கு மேலான காலம் அரசியலில் இருந்து ஒதுக்கி வைத்தது. சிறிமாவோ ஆட்சிக் காலத்து பாண் "கியூ" மக்கள் மனங்களில் நீண்டகாலமாக ஒரு பயங்கரக் கனவாகவே இருந்து வந்தது.

பாண் விலையை அரைவாசியாகக் குறைப்பேன் என்று வாக்குறுதியை அளித்தே சந்திரிகா தேர்தல்களில் வெற்றி பெற்றார் என்று மதிப்பிடுவோரும் உண்டு

எப்படி இருப்பினும், பாண் விலை குறைப்பு அவருடைய தேர்தல் வெற்றிக்குத் துணை புரிந்தது என்பதில் சந்தேகம் இல்லை.

சிங்கள மக்கள் ரூபா 3.50க்குப் பாணைத் தரும்படி கேட்கவில்லை. அரசாங்கம் தான் இந்த விலைக்குப் பாணைக்கொடுத்தது.

இவ்வாறு விலையைக் குறைத்துக் கொடுத்த போது அரசாங்கத்துக்கு எந்த நட்டமும் ஏற்படாது என்று சந்திரிகாவும் ஆதரவாளர்களும் கூறினார்கள்.

அரசின் புதிய இராகம்

ஆனால் அரசாங்கம் இப்பொழுது வேறொரு இராகத்தைப் பாடுகிறது!

பாணை ரூபா 8.50 க்கும் மாவை 6 ரூபாவுக்கும் விற்பதால் அரசாங்கம் ஆண்டுக்கு 2கோடி ரூபா நட்டத்தையும் உலகச் சந்தையில் மாவின் விலை அதிகரித்துள்ளபடியால் 7கோடி ரூபா நட்டத்தையும் சந்திக்கிறது என்று அரசு இப்போது கூறுகிறது.

பாணின் விலையை அதிகரிப்பதற்கு ஆதரவாக சந்திரிகா அரசாங்கம் இன்னொரு வாதத்தையும் முன் வைக்கிறது.

குறைந்த விலையில் பாணை விற்பதால் விவசாயியின் வயிற்றில் அடிக்கப்படுகிறதாம். அதாவது விவசாயி தனது நெல்லைக் கூடிய விலைக்கு விற்க முடியவில்லையாம். ஆகவே விவசாயிக்கு உதவி புரிய பாணின் விலையைக் கட்டாயம் அதிகரிக்க வேண்டும் என்கிறது அரசாங்கம்.

பாணின் விலை உயர்வு என்பது சந்திரிகா அரசாங்கத்தின் நம்பகத் தன்மையை மிகவும் பாதிக்கும் ஒரு விஷ

யமாகும். பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் எந்த வாக்குறுதியையும் நம்பியிருக்க முடியாது என்பதை இதுவும் காட்டுகிறது.

பாணும் அரிசியும்

விவசாயிக்கு உதவி புரிய பாணின் விலை உயர்த்தப்பட வேண்டும் என்ற வாதத்தைப் பலரும் ஏற்கவில்லை.

நகர மக்களுக்கும், கிராம மக்களுக்கும் இடையே முரண்பாட்டை ஏற்படுத்தும் முயற்சியாகவும் இது இருக்கலாம். சந்திரிகாவும் தந்தைவழியில் இன்னொரு முரண்பாட்டை ஏற்படுத்துகிறாரோ என்று யோசிக்கத் தோன்றுகிறது.

பாணுக்கு வழங்கப்படும் மானியம் விவசாயிகளுக்கு செய்யப்படும் அநீதி என்று

- புதினன் -

(6 ஆம் பக்கம் பார்க்க)



பாண் வாங்குவதற்கு வயது வேறுபாடின்றி ஆண்கள், பெண்கள், சிறுவர்கள் யாழ். நகரப் பகுதி வெதுப்பகம் ஒன்றின் முன்னால் 'கியூ' வில் நிற்கின்றனர். (ஒ)

# தமிழீழ கால்நடை வளம் குமுழமுனையில்;
# ஆனால் உரிய பயன்பெற வசதிக் குறைவு

வட தமிழீழத்தின் கால்நடை வளம் எத்தகையது என்பதை அறிந்து கொள்ள விரும்பினால் குமுழமுனை பிரதேசத்துக்குச் செல்ல வேண்டும்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் முள்ளியவளையில் இருந்து சுமார் 10 கிலோ மீற்றர் தெற்கே உள்ளது குமுழமுனை —

பச்சைப்பசேல் என்ற புல்வெளிகள், அடர்ந்த காடுகள், எப்போதும் நிலவும் ஒருவித இதமான கால நிலை.

இவை அனைத்தும் சேர்ந்த வளப்பு மிக்க பிரதேசம் குமுழமுனை. பெரும்பாலான மக்கள் இங்கு விவசாயம்

**வளம் கொழிக்கும் வன்னி மண்ணில்-4**

செய்கிறார்கள்.

15 ஆயிரத்துக்கு மேற்பட்ட கால்நடைகள் குமுழமுனை பிரதேசத்தில் உள்ளன.

1991 ஆம் ஆண்டில் அரசு விதித்த பொருளாதாரத் தடை இவர்களின் பயிர்ச் செய்கை நடவடிக்கைகளுக்கு குறுக்கே நிற்கவில்லை. வேலைகள் எல்லாம் வழமை போல் நடந்தன.

வலுமிகுந்த வடக்கன் மாடுகளும், எருமைகளும் அங்குள்ள வயல்களில் டிராக்டர்களுக்குச் சவாலாக உழைக்கின்றன.

டிராக்டருடன் போட்டி போடும் வடக்கன் மாடுகள்

குறைந்த நேரத்தில் கூடிய நிலப்பரப்பை உழுது தள்ளும் வடக்கன் மாடுகள் குமுழமுனைப் பிரதேசத்தின் தனிச் சின்னங்கள்

கால்நடைகளுக்கான நோய்த் தடுப்பு மருந்து வகைகளுக்கு மட்டுமே அரசாங்

## நாளாந்தம் சுமார் 800 லீற்றர் பால் கறக்கப்படாமல் வீணாகும் அவலம்

கத்தை நம்பியிருக்க வேண்டியுள்ளது என்கிறார் அங்குள்ள கால்நடை வைத்தியர் பிரிவைச் சேர்ந்த ஒருவர்.

கால்நடைகளுக்கு நோய் கண்டால் கால்நடை வைத்தியரை நாடி சுமார் 24 கிலோமீற்றருக்கு அப்பால் புதுக்குடியிருப்புக்குச் செல்ல வேண்டிய நிலையே நீண்ட காலம் நீடித்து வந்தது.

ஆனால் இப்போது அந்த சிரமங்கள் இல்லை. தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் வெண்மை விலங்கு வேளாண் சேவையின் அனுசரணையுடன் கால்நடை வைத்திய நிலையம் ஒன்று அங்கேயே திறக்கப்பட்டுள்ளது.

கால்நடைகளுக்கான நோய்த் தடுப்பு மருந்து வகைகள், ஊசி மருந்து என்பன அந்த நிலையத்தில் உள்ளன.

கால்நடைகளுக்கு வைத்திய சேவை புரியும் இளைஞர்கள்

முன்பு போல் கால்நடை வைத்தியர்களைத் தேடி அலையும் நிலையும் அங்கு இல்லை. குமுழமுனையைச் சேர்ந்த 18 படித்த இளைஞர்களுக்கு கால்நடை வைத்திய பயிற்சி வழங்கப்பட்டு அவர்கள் அந்த சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

நோய் ஏற்பட்ட இடங்களுக்கு நேரடியாகச் சென்று அவர்கள் வைத்திய சேவை புரிகின்றனர்.

கால்நடைகளுக்கான மருந்து வகைகளுக்கு மட்டும்

> ..வட தமிழீழத்தில் கால்நடைச் செல்வங்கள் செறிந்த இடம் குமுழமுனை. அரசு விதித்த பொருளாதாரத் தடை அந்த மண்ணில் பயிர்ச் செய்கையை பெரிதாக ஒன்றும் பாதித்துவிடவில்லை. வலு மிகுந்த வடக்கன் மாடுகளும், எருமைகளும் அங்குள்ள வயல்களில் டிராக்டர்களுக்குச் சவாலாக உழைக்கின்றன...

15 வீத கழிவுடன் பண்ணையாளர்களிடமிருந்து பணம் அறவிடப்படுகிறது.

மழை காலம் தொடங்கியதும் நோய்கள் அதிகரிக்கும். அப்போது மருந்து வகைகள் போதியளவு தேவைப்படும் என்கிறார் பயிற்சி பெற்ற துணைப்படை வீரரும் கூட.

தரத்தில் சிறந்த பால், நெய்

குமுழமுனையில் பெறப்படும் பால், நெய் என்பன சுவை மிகுந்தவை, தரமானவை.

வெண்மை விலங்கு வேளாண் சேவையின் கீழ் உள்ள பாற்சாலை ஒன்றுக்குச் சென்றிருந்தோம்.

குமுழமுனையின் பல இடங்களிலும் இருந்து நாளொன்றுக்கு 420 லீற்றர் பால் அங்கு வந்து சேர்கிறது. அதில் 120 லீற்றர் பால் மட்டுமே சந்தைப்படுத்தப்படுகிறது.

எஞ்சிய பாலில் இருந்து ஆடை நீக்கப்பட்டு வெண்ணெய் பெறப்படுகிறது பின்னர் அதிலிருந்து நெய் தயாராகிறது.

சுகாதாரமான முறையில் பசு நெய், எருமை நெய் என்பன அங்கு உற்பத்தியாகின்றன. எருமை நெய் போத்தல் 185 ரூபாவாகவும், பசு நெய் 175 ரூபாவாகவும் விற்பனை செய்யப்படுகிறது.

நெய் காய்ச்சும் பணியில் பெண்கள்

சிறிய இயந்திரம் மூலம் பால் ஆடை நீக்கப்படுகிறது. சில பெண்கள் நெய் காய்ச்சும் வேலையில் ஈடுபட்டுள்ளனர். ஆயினும் போதிய சந்தை வாய்ப்பு இல்லாத

- நல்லூர் தாஸ் -

தால் தொழிலில் சுறுசுறுப்பு இல்லை.

ஆடை நீக்கப்பட்ட நூற்றுக்கணக்கான லீற்றர் பால் நீண்ட காலமாக பயன்பாடு இன்றி வெளியில் ஊற்றப்பட்டு வந்ததாக அறிந்த போது அதிர்ச்சியடைந்தோம்

தற்போது அந்தப் பால் "வாண்ட் மாஸ்ரர்"களின் கிராமப் பகுதிகளுக்கு எடுத்துச் செல்லப்பட்டு பள்ளிச் சிறார்களுக்கு இலவசமாக விநியோகிக்கப்படுகிறது.

பால் தாராளம்

ஆயினும் பால் குடிப்பதில் எவரும் ஆர்வமாய் இல்லை. ஏனெனில் வீடுகளில் உள்ள மாடுகளில் பால் தாராளம்.

பாலைக் கறந்து என்ன செய்வது? அதனால் கறக்காமலே விட்டுவிடும் பண்ணையாளர்களே அதிகம்.

நாளாந்தம் சுமார் 800லீற்றர் பால் இவ்வாறு மாடு

(6 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னசிறு விளம்பரம்


## விற்பனைக்கு

சோலர் பனல் 10W, — 12V விற்பனைக்குண்டு. தொடர்பு: இல. 393/9, கோவில் வீதி, நல்லூர். (39000)

ஒறிஜினல் வலண்டிங்குடன் BM 500 Honda Dinamo [பெல்டில் ஓடக்கூடியது] இதன் எஞ்சின் உதிரிப்பாகங்கள் Hitachi V.T 7000 E வீடியோ கமரா, டெக் பழுதடைந்த நிலையில் புதிய செட் உடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: 628/3 கே. கே. எஸ். றோட், நாச்சிமார் கோயிலடி, யாழ்ப்பாணம். (39011)

கோயிலக்கண்டி நாவற்குழியில் 10 ஏக்கர் தென்னம் தோட்டக்காணியும், வயல் காணியும் வீட்டுடன் விற்பனைக்குண்டு. தண்டு துண்டாகப் பிரித்தும்கொடுக்கப்படும். தொடர்பு: பா. கணேசானந்தன், "விவாகப் பதிவாளர் இல்லம்", 17/4, றெயில்வே வியூ [சோராசுத்தரம் ஒழுங்கை], சுண்டிக்குளி, கச்சேரியடி. (88958)

## காணி விற்பனைக்கு

மருத்துவ பீடத்திற்கு அருகில் நான்கு பரப்பு சதுர வடிவமான காணி விற்பனைக்கு உண்டு. தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி: மா. சிவசுப்பிரமணியம், இல. 53/13, கொக்குவில் றோட், திருநெல்வேலி மேற்கு, திருநெல்வேலி. (38960)

## வீடு விற்பனைக்கு

2 பரப்பு காணியில் அமைந்திருக்கும் வீடு விற்பனைக்கு உண்டு. பிரபல ஆண், பெண் பாடசாலைகள், யாழ். செயலகம், தனியார் மருத்துவமனைக்கு அருகில் உள்ளது. விலாசம்: 30, சுவாட்ஸ் லேன், சுண்டிக்குளி (கண்டி வீதியில் உள்ள முன்னைய ஆசீர்வாதம் அச்சகம் முன்பாக) (8661)

## தேவை

எமது புகைப்பட நிலையத்திற்கு வேலை பழகி, வேலை செய்ய இருபாலாரும் விண்ணப்பிக்கலாம். வெளிமாவட்டங்களில் இருந்தும் விண்ணப்பிக்கலாம். தங்குமிட வசதி செய்து தரப்படும். குழந்தைகள் புகைப்படக் கலையகம் (Children Photo) பல்கலைக்கழக சந்தி, பலாலி வீதி, திருநெல்வேலி. விண்ணப்ப முடிவு திகதி 6-11-95. (38993)

## மலிவு விற்பனை

கலப்பினமற்ற பிறாமா, சிந்தி, பண்டம், பாமாஸ், வெள்ளடியன் (கன்னி) கோழிகள், சேவல்கள் மலிவு விற்பனையில் தொடர்பு: ஜெயதேவன் 34/1, பழைய பூங்கா வீதி, சுண்டிக்குளி, யாழ்ப்பாணம். (39009)

## மணமகன் தேவை

கௌரவமான வசதியான குடும்பத்தைச் சேர்ந்த 32 வயதுடைய குற்றமற்ற, அழகிய சைவ போசனமுள்ள இந்து பட்டதாரிப் பெண்ணுக்கு பெற்றோர் மணமகனைத் தேடுகின்றனர். பட்டதாரி, டாக்டர், என்ஜினியர், சட்டத்தரணி விரும்பத்தக்கது. கடிதமூலம் தொடர்பு: இல. 858, C/o உதயன், யாழ்ப்பாணம். (38996)

## O/L கணிதம்

Distinction Credit பெறுபேறுடைய (6 வாரங்களில்) இதுவரையும் பெறுபேறடையாதவர்களுக்கும் அனுபவமுள்ள B Sc. ஆசிரியரால் கற்பிக்கப்படும். 85, சிவன் கோவில் மேற்கு வீதி, திருநெல்வேலி. (39012)

## புலமைப்பரிசில்

ஆண்டு - 5 புலமைப்பரிசில் பரீட்சைக்கான அடிப்படைக் கல்வி 1995 முதல் நடைமுறைக்கு வரும். புதிய பரீட்சைத் திட்டத்துக்கு அமைவான வழிகாட்டியும் வினா விடைக் கொத்தும், ஆக்கம்: வி. என். எஸ். உதயச்சந்திரன் வெளியீடு: பூபாலசிங்கம் புத்தக நிலையம், யாழ்ப்பாணம். (சி-2400)

## சோதிடம்

ஜாதகம் கணிக்க கல்வி, திருமணம், பிரயாணம், எதிர்கால பலன் அறிய ஸ்ரீமாவை விநாயகர் சோதிட நிலையம், இல. 361, பருத்தித்துறை வீதி, நல்லூர். (38973)

## வணிக புள்ளி விபரவியல்

வணிகப் புள்ளி விபரவியல் க. பொ. த. உயர்தரம் பகுதி I ஆக்கம் ராஜ் எஸ். குமார் B Sc செ. ஜெயரங்கன் B Sc. விற்பனையாகிறது. பூபாலசிங்கம் புத்தக நிலையம், யாழ்ப்பாணம். (சி-2456)

## ஆங்கில ஆசிரியர் தேவை

பகுதி நேர, முழு நேர ஆங்கில ஆசிரியர்கள் உடன் தேவை.

விண்ணப்பிக்கவும்

இல. 857,
மே / பா உதயன். (38970)

## DIPLOMA IN PHARMARCOLOGY
(ENGLISH MEDICINE)

சனி, ஞாயிறு வகுப்புகள்

**ஆரம்பம்: 28 - 10 - 1995**

Lecture by:
Dr. V. P. Sundararajan

குறிப்பு: சுதேச, மேற்கத்திய (ஜேர்மனி) வைத்தியர்களுக்கும் வைத்திய மாணவர்களுக்கும் மாத்திரம்.

**சாயி மருத்துவ கல்லூரி**
இல: 10. பருத்தித்துறை வீதி,
யாழ்ப்பாணம்.
(சி-2441)

## DIPLOMA IN NURSING
(தாதிப் பயிற்சியில் டிப்ளோமா)

புதிய பயிற்சி நெறிகள்

**ஆரம்பம்: 18 - 10 - 1995**

- இங்கு விரிவுரைகள், இலவச ஆங்கில வகுப்புக்கள்
- சிறந்த விரிவுரையாளர் குழு
- நாட்டின் சிறந்த வைத்தியசாலையில் மாத விசேட செய்முறைப் பயிற்சி
- உள்நாட்டு, வெளிநாட்டு வேலைவாய்ப்புக்கள்

விவரங்களுக்கு;

**NORTH CEYLON TECHNICAL INSTITUTE**
14, St. Peter's Lane,
Jaffna
(சி-2449)


## ஓராண்டு நினைவஞ்சலி



**அமரர் தியாகராசா தங்கராசா**
(ஓய்வுபெற்ற ஓவசியர்)

எங்கள் இதயங்களின் அணையா விளக்கே!
எம்மை எல்லாம் வழி நடத்திய தெய்வமே!
மறைந்தும் மறையாத எம் தெய்வமே!
ஆண்டு ஒன்று போனாலும் மாறாது எம் அன்பு.

ஆத்ம சாந்தி அடைக!

நினைவு கூரும்!
குடும்பத்தினர்,
உற்றார், உறவினர்.

'பாமா வாசா',
மாலிசந்தை,
துன்னாலை தெற்கு,
கரவெட்டி. [38934]

## 3-ம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு: 05 — 01 — 1917



இறப்பு: 15 — 10 — 1992

**பொன்னுத்துரை செல்வரத்தினம்**
[இளைப்பாறிய கூ. பரிசோதகர்]

குடும்ப ஒளி விளக்கே! தூண்டாத் திருவிளக்கே!
மாண்டீர்கள் என்பதை நம்ப மனம் மறுக்கிறதே!
உங்கள் ஆத்ம சாந்திக்காக பிரார்த்திக்கும்.

— மனைவி

"மன்றம்"
லோட்டன் வீதி,
மானிப்பாய். (39009)

## 4-ம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு: 27 - 04 - 1962

உதிர்வு: 15- 10 - 1991

**தவப்புதல்வி**
**சிவகௌரி அம்மன்**

ஆண்டுகள் நான்கு ஓடி மறைந்தாலும்
உன் நினைவுகள் எம்மைவிட்டு அகலாதம்மா
பெண்ணெனப் பிறந்த தெய்வம் எம்மைப்
பேணியே மதித்த தெய்வம்
கண்ணெனக் கண்ட தெய்வம்
உன் ஆத்மா சாந்தியடைய
அப்பன் கவிழ்ந்தி கண்ணீர்பூக்கள் சொரிகின்றோம்

உன் பிரிவால் துயருறும்;
அன்பு நெஞ்சங்கள்.

றியோ கிறீம் ஹவுஸ்,
75, பாரிசல் வீதி,
யாழ்ப்பாணம். [39010]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இன்று வெள்ளைப் பிரம்பு தினம்:

# விழிப்புலன் அற்றோருக்கு எல்லோரும் உதவுவோம்

இன்று ஒக்ரோபர் 15 ஆம் திகதி சர்வதேச வெள்ளைப் பிரம்பு தினமாகும். இத்தினம் ஒவ்வொருவரு — டும் ஒக்ரோபர் 15 ஆம் திகதி கொண்டாடப்படுகிறது இத்தினத்திற்கு சர்வதேச லயன்ஸ் கழகம் முக்கியத்துவமளித்துக் கௌரவித்து வருகிறது.

விழிப்புலனற்றவர்களை இனம் காணவும், அவர்களுக்கு உதவிசெய்யவும் போக்குவரத்துக்கும், வீதியில் தமக்கெதிரே வரும் வாகனங்களை விலத்தவும் வீதியைக் கடக்கவும் விழிப்புலன் உள்ள மக்கள் மனிதாபிமானமாக உதவி செய்ய வேண்டும்.

வெள்ளைப் பிரம்பை விழிப்புலன் அற்றோர் தம்முடன் எடுத்துச் செல்கின்றனர். இதன்மூலம் நாம் அவர்களை இனம் கண்டு வேண்டிய உதவி செய்ய முடிகிறது.

வெள்ளைப் பிரம்பு தினத்தில் விழிப்புலனற்றவர்களை அழைத்து ஊர்வலமாகவருவதுடன் விழாவும் எடுக்கப்படுகிறது. இங்கே இவர்களுக்கு வெள்ளைப் பிரம்பையும், நேரத்தை அறியக்கூடிய அலாம் மணிக்கூட்டையும், பிறெயில் எழுதும் கருவியையும், பிறையில் முறையில் ஆக்கப்பட்ட நூல், சஞ்சிகைகளையும் ஏனைய வெகுமதிகளையும் கொடுத்துக் கௌரவிக்கப்படுகின்றனர்.

விழிப்புலனற்றவர்களை இனம் காட்டுவதாலும், இனம் காண்பதாலும், கௌரவிப்பதாலும், பொது மக்கள் அவர்களுக்கு உதவி செய்யும் மனப்பக்குவத்தையும் ஆர்வத்தையும் ஏற்படுத்தும் நோக்கமாக வெள்ளைப் பிரம்பு தினம் கொண்டாடப்படுகிறது விழிப்புலனற்றவர்களும் எம்மைப்போல வாழ வழி காட்டுவோம்.

லயன் செ. சுப்பிரமணியம்

★ ★ ★

இன்று வெள்ளைப் பிரம்பு தினம்;

விழிப்புல வலுவிழந்தவர்களின் ஓர் எழுச்சி நாள்!

'குருடர்' என்று ஒதுக்கி வைத்திருந்த உலகத்தின் குருட்டு நம்பிக்கைகளை புதைகுழிக்கு அனுப்பி விட்டு புதிய உரத்துடன் இளைய சக்தியொன்று இங்கேயும் முளை விடத் தொடங்கியிருக்கிறது.

''நாங்கள் விழிப்புல வலுவிழந்தவர்கள் மட்டும் தான்'' என்று கூறிக்கொள்ளும் இவர்களின் ஆளுமையை வெளிக் கொணர்வதில் கடந்த 7 வருடங்களாக விழிப்புல வலுவிழந்தோர் 'வாழ்வகம்' சேவையாற்றி வருவது யாவரும் அறிந்ததே

★ உணவு, உடை, வதிவிட வசதி மற்றும்—

★ கல்வி, கலை, கலாசாரத்துடன் தொழிற்பயிற்சி

★ சுயமாக இயங்கக் கூடிய தன்னம்பிக்கை

ஆகியவற்றை வழங்கி சாதி சமய பேதமின்றி வலுவிழந்த சிறார்களை வாழவைத்துக் கொண்டிருக்கும் வாழ்வகம் இடம்பெயர்ந்து பல இன்னல்கள் மத்தியிலும் இன்னும் தன் சேவையை இம்மண்ணிற்கு வழங்க திடசங்கற்பம் பூண்டுள்ளது.

ஆகவே வெள்ளைப்பிரம்பு தினமான இன்று உலகம் முழுவதும் பரந்து வாழும் விழிப்புல வலுவிழந்த தோழர்களுக்கு வாழ்த்துச் சொல்வதோடு இந்த மண்ணிலும் இன்னும் இருட்டுக்குள் வாழ்ந்து கொண்டிருக்கும் சக உறவுகளுக்கும் தன் எழுச்சிக் குரலை தெரிவித்துக் கொள்கிறது.

உங்களுக்கு உதவி செய்யவும், உங்கள் உதவி பெறவும் 'வாழ்வகம்' என்றும் தயாராக இருக்கிறது

(வெள்ளைப்பிரம்பு தினத்தை முன்னிட்டு உடுவிலில் உள்ள வாழ்வகம் விடுத்துள்ள செய்தி)

# எல்லாளன் மன்னன் தமிழன் அல்லவாம்!

கொழும்பு, ஒக். 15

எல்லாள மன்னர் ஒரு தமிழர் அல்ல. அவர் யெமென் அல்லது ஓமானைச் சேர்ந்த அராபியராக இருக்கலாம்.

எமது சமுதாய வரலாறு திரும்ப ஆராயப்பட்டு திரும்ப எழுதப்பட வேண்டும்.

ஒக்டோபர் 11 ஆம் திகதி ''ஐலண்ட்'' பத்திரிகையில் வெளிவந்த ஆசிரியர் கடிதம் ஒன்றில் இவ்வாறு கூறப்பட்டுள்ளது.

கண்டியைச் சேர்ந்த நிசங்க விஜேரத்ன என்பவர் இக் கடிதத்தை எழுதியுள்ளார்.

கடிதம் கூறுவதாவது:

நீதியான மன்னர் எல்லாளன் ''தமிழன்'' என்று அடிக்கடி கூறப்படுகிறது. தமிழரும் எல்லாளனை அவ்வாறே கூறுகின்றார்கள். சிங்களவரும் எல்லாளனை இவ்வாறு கூறி அவமதிக்கிறார்கள். தற்காலத்தவர் வெள்ளையர் அனைவரையும் பறங்கிகள் என்று கூறுவதைப் போல் மஹாவம்ச ஆசிரியரும் அந்நியர் அனைவரையும் தமிழர் என்றே இனங் கண்டனர். சேனக, குத்திக ஆகியோரைப் போல எல்லாளனும் குதிரை வாணிக, வர்த்தக வம்சங்களைச் சேர்ந்தவர்.

அவர்கள் இந்து சமுத்திரத்தின்மேற்குக் கரையோரத்தைச் சேர்ந்தவர்கள். எமது நாட்டுக்கு கப்பற் வேலை நுட்பங்களை அறிமுகம் செய்த யெமென் அராபியர்களாக அல்லது கடற்போக்குவரத்துக்குப் பருவகாலத்தைப் பயன்படுத்துவதைக் கண்டு பிடித்த ஓமான் நாட்டு கடலோடி அராபியர்களாக இருக்கலாம் —

இஸ்லாம் மதத்தின் வருகைக்கு முன் அவர்கள் இங்கு வந்தார்கள். அவர்கள் சொந்தமான மத நம்பிக்கை உடையவர்களாக இருந்தார்கள். அவர்கள் மிகவும் நாகரிகம் படைந்தவர்களாகவும், நீதியானவர்களாகவும் இருந்தார்கள். அவர்கள் அராபிய மொழியைப் பேசினார்கள்.

எல் - அல் என்றால் 'மகத்தானவர்', 'உன்னதமானவர்', 'வழிகாட்டி' அல்லது 'சிநேகிதன்' என்று அர்த்தப்படும். இந்த அல் என்ற அடி ''அல்லா'' (அதிமேன்மையானவர்) என்பதிலும் கிறிஸ்தவ ஹலேலூயா என்பதிலும் காணப்படுகிறது.

[17 ஆம் பக்கம் பார்க்க]

# புலிகளைத் தடை செய்யும் நோக்கம் அரசிடமுண்டா?

## செய்தித் தணிக்கை முறியடிப்பு இனவாதிகளுக்கு தந்த கொதிப்பு!

1987 ஆம் ஆண்டில் இந்திய இராணுவம் குடாநாட்டில் நடத்திய பெரும் தாக்குதலின் பின்னர் — எட்டு வருட காலத்தின் பின்னர் — ஸ்ரீலங்கா இராணுவம் யாழ்ப்பாணக் குடாநாட்டில் நடத்திய பெரும் இராணுவத் தாக்குதல் ''முன்னேறிப் பாய்தல்'' என்று உலகின் பிரபல சஞ்சிகைகளில் ஒன்றான ''ரைம்'' தெரிவித்திருக்கிறது.

ஆனால் விடுதலைப் புலிகள் நடத்திய ''புலிப்பாய்ச்சல்'' நடவடிக்கையினால் அரசாங்கத் துருப்புகள் பெரும் தோல்வி கண்டு, தாம் கைப்பற்றிய பிரதேசங்களைக் கைவிட்டுப் பின்வாங்க நேரிட்டது என்றும் அந்தச் சஞ்சிகை வர்ணிக்கிறது.

முன்னேறிப் பாய்தல் நடவடிக்கையின் போது கொலையுண்ட இராணுவ உயர் அதிகாரிகளின் சிதைந்து போன சடலங்கள், இராணுவ மரியாதையுடன் தகனம் செய்யப்பட்ட காட்சிகளையும் ''ரைம்'' சஞ்சிகையின் கட்டுரையாளர் வர்ணித்துள்ளார்.

முன்னேறிப் பாய்தலில் சந்தித்த தோல்வியை ஈடு செய்து விட வேண்டும்; எப்படியேனும் வெற்றிக்கனியைப் பெற வேண்டும்; தாம் இராணுவ ரீதியில் மேலோங்கி நிற்பதாகக் காட்ட வேண்டும் என்பதற்காகவே —

''இடிமுழக்கம்'' நடவடிக்கையை இராணுவம், மூன்று மாதங்களின் பின்னர் இம் மாதம் முதலாம் திகதி தொடங்கியது.

முன்னேறிப் பாய்தலில் கண்ட தோல்வியை ''இடிமுழக்கம்'' மூலம் ஈடுசெய்து விட்டதாக இப்போது இராணுவத் தரப்பில் திருப்தி உண்டாகி இருக்கிறதாம். இந்த வெற்றியினால் தமது துருப்புகளின் மனோநிலை பெரிதும் மாறியிருப்பதாகவும் தொடர்ந்தும் தாக்குதல்களில் ஈடுபட அவை தயாராக இருப்பதாகவும் இராணுவ உயர் வட்டாரங்களில் பேசிக் கொள்ளப்படுகிறது.

முன்னேறிப் பாய்தல் இராணுவ நடவடிக்கையின் போது அரசாங்கப்படைகள் நடத்திய படுகொலைகள், மனித உரிமை மீறல்கள் குறித்த தகவல்கள் வெளிநாடுகளுக்குத் தாராளமாகக் கிடைத்தன. சுயேச்சையான வட்டாரங்களூடாகவும் அவை வெளியே சென்றன.

நவாலிப் படுகொலைகளை மறைத்துப் பொய்யாக்க அரசு எடுத்த முயற்சிகள் பலிக்கவில்லை.

### தணிக்கையும் படுதோல்வி

அதனை மனதில் வைத்தே ''இடி முழக்கத்தை'' ஆரம்பிக்கு முன்னதாக போர்ச் செய்திகளுக்குத் தணிக்கை கொண்டு வரப்பட்டது.

ஆனால் இங்கே துருப்புகள் நடத்திய அட்டூழியங்கள் அனைத்தும், மக்களுக்கு உண்டான அவலங்கள், கஷ்டங்கள் அத்தனையும் வரிக்கு வரி வெளியே, சர்வதேசங்களையும் சென்றடைந்தன.

பாவம், தென்னிலங்கைச் சிங்கள மக்களை மட்டுமே சந்திரிகா அரசினால் இருட் [illegible] யாழ்ப்பாணத்துச் செய்திகள் வெளியுலகை விரைவாகச் சென்றடைந்தமை அரசாங்கத்தின் செய்தித் தணிக்கையையும் படுதோல்வி காணச் செய்தது.

அந்தத் தோல்வியை மறைப்பதற்காக வெளிநாட்டுச் செய்தியாளருக்கான தணிக்கையை அரசு நீக்க வேண்டியதாயிற்று!

எனினும் யாழ்ப்பாணத்தின் உணவு நிலைமை உட்பட இராணுவ நடவடிக்கைகளால்

**சதுரங்கம்**

மக்களுக்கு உண்டாகும் பாதிப்புகள் அனைத்தையும் விடுதலைப் புலிகள் தமது சர்வதேச அலுவலகங்களூடாக உலகச் செய்தி நிறுவனங்களுக்கு உடனுக்குடன் அறிவித்து வந்தனர்; வருகின்றனர்.

இது அரசாங்கத்தின் தகவல் இயந்திரத்துக்கும், வெளிநாடுகளில் உள்ள ஸ்ரீலங்கா தூதரகங்களுக்கும் பெரும் சவாலாக மாறியது.

### புலிகளைத் தடை செய்தல்

அதனைத் தொடர்ந்து வெளிநாடுகளில் விடுதலைப் புலிகள் எவ்வித கட்டுப்பாடும் இல்லாமல் சுதந்திரமாக இயங்குவது பற்றிய பிரச்சினை மீண்டும் கிளம்பத் தொடங்கியது.

[illegible] தொடங்குவது என்று தீர்மானித்தவையோடு அரசாங்கத்துக்கு இப்படி ஒரு யோசனை தோன்றியது.

விடுதலைப் புலிகள் வெளிநாடுகளில் அலுவலகங்களை வைத்திருக்கிறார்கள். அவற்றின் மூலம் அங்கு வாழும் தமிழர்களிடம் பணம் சேகரிக்

**— சாணன் —**

கிறார்கள். அந்தப் பணத்தைக் கொண்டு நவீன ஆயுதங்களை வாங்குகிறார்கள் —

விடுதலைப் புலிகளை இராணுவ ரீதியாகப் பலவீனப்படுத்துவதற்கு அவர்களின் ஆயுத வலுவைக் குறைக்க வேண்டும் —

ஆகையால் விடுதலைப் புலிகள் வெளிநாடுகளில், மேலை நாடுகளில் இயங்குவதை அந்த நாடுகளைக் கொண்டு தடுக்க வேண்டும் என்று அரசு திட்டமிட்டது. இந்தத் திட்டத்தை நிறைவேற்றும் பொறுப்பு வெளிநாட்டமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரிடம் ஒப்படைக்கப்பட்டது.

அவர் இதற்கென மேலை நாடுகளுக்குத் திடீர் விஜயம் செய்தார். தமது கோரிக்கையை விடுத்தார்.

உங்கள் நாட்டில் விடுதலைப் புலிகளைத் தடை செய்யாமல், எங்களை அவ்வாறு செய்யுமாறு எப்படிக் கேட்க முடியும்? — என்று அவர்கள் முகத்தில் அறைந்தது போலக் கேட்டன வெளிநாட்டு அரசுகள்!

தலையைத் தொங்கப் போட்டுக் கொண்டு கதிர்காமர் நாடு திரும்பி விட்டார்.

ஆனால் இப்போது—

போர்ச் செய்திகள் மீதான தணிக்கையையும் விடுதலைப் புலிகள் முறித்து விட்டது கண்டு மீண்டும் விடுதலைப் புலிகளைத் தடை செய்ய வேண்டும் என்ற குரல் தெற்கில் எழுந்துள்ளது.

சூடுகண் — பூனை அடுப்பங்கரையை நாடாது அல்லவா? கதிர்காமர் இது விடயத்தில் இப்போது பின்னடிக்கிறார்.

ஐக்கிய நாடுகள் சபையின் ஐம்பதாவது மாநாட்டில் கலந்து கொள்ளச் சென்றிருக்கிறார். பல வெளிநாடுகளின் அமைச்சர்களைச் சந்தித்துப் பேசினார்.

போரினூடு சமாதானம் காண்பது என்ற சந்திரிகாவின் கோட்பாட்டுக்கு [illegible] வெளிநாடுகளின் ஆதரவைத் திரட்டும் முயற்சியிலேயே அவர் ஈடுபட்டார். விடுதலைப் புலிகளைத் தடை செய்யுமாறு கேட்கும் விவகாரத்தைத் தொடவே இல்லை.

ஆனால் தென்னிலங்கைச் சிங்களத் தீவிரவாதிகளும், 'த ஐலண்ட்' போன்ற பத்திரிகைகளும் விடுதலைப்புலிகளை உள்நாட்டில் தடை செய்யவேண்டும் அதன்மூலம் வெளிநாடுகளில் தடை செய்விக்க வேண்டும் என்று வலியுறுத்த முற்பட்டுள்ளன.

ராஜீவ்காந்தி கொலை வழக்குச் சம்பந்தமாக இந்தியா அடிக்கடி தொல்லை கொடுத்த போதிலும், சந்திரிகா அரசு விடுதலைப்புலிகளைத் தடை செய்வதில் பெரிதாக அக்கறை காட்டவில்லை.

### சொல்லுவார் சொன்னால் ..

இப்போது போர் நடைபெறுகிறது விடுதலைப் புலிகளைப் பலவீனப்படுத்த வேண்டும் என்று அரசு கூறுகிறது. அப்படியானால் புலிகளை இப்போது தடை செய்ய வேண்டும். அவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தும் அவசியம் ஏற்படும் பட்சத்தில் தடையை நீக்கலாம்தானே — என்று சிங்களத் தீவிரவாதத் தரப்புகள் தென்னிலங்கையில் வாதாடுகின்றன.

ஆனால் விடுதலைப் புலிகளைத் தடை செய்து விட்டு நினைத்த மாத்திரத்தில் அதனை நீக்கிவிட முடியாது என்ற சட்டச் சிக்கல் ஒன்றும் உண்டு.

இந்தச் சிக்கல்கள் எதனையும் அரசு மனதில் கொள்ளவில்லையாம்.

விடுதலைப் புலிகளைத் தடை செய்து பேச்சுவார்த்தைக்கான கதவை இழுத்து மூடிவிட்டால், அதனால் உண்டாகக்கூடிய ஆபத்துக்களையே அரசு முன்னெச்சரிக்கையுடன் நோக்குவதாகக் கூறப்படுகிறது.

இது விடயத்தில் சந்திரிகா உறுதியாக இருந்தால் சரிதான். இல்லையேல் நாட்டைப் பேராபத்தில் கொண்டு போய் நட்டாற்றில் விடுவார் அவர்.

சொல்லுவார் சொன்னால் கேட்பாருக்கு மதி என்ன என்ற மன உறுதி சந்திரிகாவுக்கு உண்டா? ★

## கோப்பாய் உ. அ. அ. அலுவலகம்

சாவகச்சேரி, ஒக். 15

கோப்பாய் உதவி அரச அதிபர் அலுவலகம் சாவகச்சேரி நகராட்சி மன்றத்தின் மின்சாரப் பகுதி அலுவலகத்தில் இயங்கி வருகிறது.

(இ-3 L)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அறிவித்தல்

விழிப்புல வலுவிழந்த வாழ்வகப் பிள்ளைகளின் பெற்றோரை உடனடியாகவும் அவசியமாகவும் உடுவில் வாழ்வகத்தில் வந்து சந்திக்கும்படி கேட்டுக் கொள்கிறேன்.

— நிர்வாகி.

(சி-2472)

அளவெட்டி மல்லாகம்
பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்
[வரையுள்ளது]

## புடவை நிலைய இருப்பு விற்பனை

எமது சங்கத்தால் நடத்தப்படும் புடவை நிலையத்தினை முற்றாக மூடிவிட இருப்பதால் அந் நிலையத்திலுள்ள பொருள்கள் முழுவதையும் கூறுவிலை கோரி விற்பனை செய்யத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

துணிகளின் வகைகள், தொகை, அளவு என்பவற்றின் பட்டியலை சங்கத் தலைமைக் காரியாலயத்தில் பார்வையிடலாம்.

இருப்பு பொருள்களை உரும்பிராய் ஞானவைரவர் கோவிலடியிலுள்ள சங்க புடவைநிலையத்தில்பார்வையிடலாம்.

கூறுவிலை விண்ணப்பப்படிவத்தினையும் பட்டியலையும் ரூபா 100/-செலுத்தி சங்கத் தலைமைக் காரியாலயத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

கூறுவிலை கோர விரும்புவர்கள் சங்கத்தினால் வழங்கப்படும் விண்ணப்பப் படிவத்தினையும்பட்டியலையும் பூர்த்தி செய்து 20 — 10 — 1995 திகதிக்கு பிந்தாமல் நேரடியாக தலைமைக் காரியாலயத்தில் சமர்ப்பிக்க வேண்டும்.

பொதுமுகாமையாளர்,
அளவெட்டி மல்லாகம்,
ப.நோ. கூ. சங்கம,
உரும்பிராய் மருதனார்மடம் வீதி,
மருதனார்மடம்.

(சி-2470)

## கண்ணீர் அஞ்சலி

### அமரர் தம்பு கதிர்காமராஜா

பதவி நிலை தொழில் நுட்ப அலுவலர்
தாவரவியல்துறை விஞ்ஞான பீடம்
யாழ் பல்கலைக்கழகம்

எமது துறையில் நீண்ட காலமாகக் கடமையாற்றி, கடமை நேரத்தில் திடீர் மரணமுற்ற
அமரர் தம்பு கதிர்காமராஜா
அவர்களுக்கு
எமது கண்ணீர் அஞ்சலிகளைக் காணிக்கையாக்கி, அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அன்னாரின் இழப்பால் துயருறும், குடும்பத்தினருக்கு, எமது ஆழ்ந்த அனுதாபங்களையும், ஆறுதல்களையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

தாவரவியல்துறையினர், விஞ்ஞான பீடம்,
யாழ். பல்கலைக்கழகம.

[39006]

## கணக்கு பதிவாளர் தேவை

தமிழீழ சுகாதார சேவைகள் பணியகத்திற்கு ஆண் கணக்கு பதிவாளர் ஒருவர் தேவை.

அடிப்படைத் தகைமைகள்:

க. பொ த. (உ/த) பரீட்சையில் கணக்கியல் உட்பட 2 திறமைச்சித்தியுடன் 3 பாடங்களில் சித்தி.

மேலதிகம்:

கணக்குப் பதிவியலில் முன் அனுபவம் அல்லது தொழில் நுட்பக்கல்லூரியின் கணக்கியல் பரீட்சை நெறிகளில் சித்தி.

பாடத்திட்டத்துக்கு புறம்பான செயற்பாடுகள்:

பாடத் திட்டத்துக்கு புறம்பான செயல்பாடுகள் [Extra Curricular Activities] கவனத்தில் எடுக்கப்படும்.

வயதெல்லை;

**21 — 45** வருடங்கள்

21-10-95 சனிக்கிழமை பி. ப. 2-30 — 3-30க்கும் இடையில் தகைமைச் சான்றிதழ்களுடன் நேரில் வரவும்.

முகவரி:

தமிழீழ சுகாதார சேவைகள் பணியகம்,
6/2, இளங்கோ வீதி (மணிக்கூட்டு வீதி),
யாழ்ப்பாணம்.

[சி-2471]

## புலிகளின் குரல் வானொலியில்

**15 — 10 — 1995**

**ஞாயிறு இரவு**

★ 8-02 — நீங்கள் கேட்டவை
★ 8-30 — செய்திகள்
★ 8-40 — தொடர் நாடகம்— வெள்ளை - கணேசமூர்த்தி எழுதிய — ''இலங்கைமண்'' அங்கம் —15

**16 - 10 — 1995**

**திங்கள் காலை**

★ 7-02 —மாவீரணைக்க
★ 7-15 — நீங்கள் கேட்டவை
★ 7-30 — செய்திகள்
★ 7-35 — பக்திப் பாடல் செய்திகள் தொடர்ந்து நீங்கள் கேட்டவை

## தமிழீழ வானொலியில்

**ஞாயிறு மாலை**

★ 5 01 — சிந்தனைச் சிதறல்
★ 5 02 — எழுச்சிகீதம்
★ 5-10 — புதியவை
★ 5-15 — மழலைகளுக்காக
★ 5-30 — கதம்பம்
★ 6-00 — சிந்தனைக்குச் சில வினாடிகள்
★ 6-02— உங்கள் தெரிவு
★ 6-10 — செய்திகள்
★ 6-15—உங்கள் தெரிவு

### தமிழீழ...

[3 ஆம் பக்கத் தொடர்ச்சி]

களில் இருந்து கறக்கப்படாமலே வீணாகின்றது என்பது தான் அதிர்ச்சியான தகவல்.

பாலை சேமித்து வைக்க உரிய வசதியின்மை மற்றும் தூர இடங்களுக்குக் கொண்டு சென்று விநியோகிக்க போக்குவரத்து வசதியின்மை என்பனவே பிரதான பிரச்சினைகளாக உள்ளன.

பாலைக் குளிரூட்டி யாழ்ப்பாணத்துக்கு எடுத்துவரும் திட்டம் ஒன்று கைத்தொழில் பகுதியினரிடம் இருப்பதாகச் சொல்லப்படுகிறது. இத்தகைய ஒரு திட்டம் அவசியமானதாகும்.

குமுழமுனையில் உள்ள பண்ணையாளர்களுக்கு மேலும் வசதிகளை வழங்க விரிவான திட்டங்கள் தேவை.

குமுழமுனையில் இருந்து திரும்பிய பின்னரும் அங்குள்ள கால்நடைச் செல்வங்களை எண்ணுகையில் மனம் நிறைவடைகிறது

தமிழீழத்தின் எதிர்காலப் பால் மா உற்பத்தி மையமாக விளங்கக்கூடிய எல்லா சிறப்புக்களையும் குமுழமுனை தன்னகத்தே கொண்டுள்ளது என்றே கூறலாம். ★

### எல்லாளன்...

[5 ஆம் பக்கத் தொடர்ச்சி]

அவருடைய உன்னத குண இயல்பு காரணமாக எல்- ஆல் மக்களால் மதிக்கப்பட்டார். அவருடைய கொடிய ஆசர வாளர்கள் தான் நிலத்தையும் மக்களையும் சுரண்டினார்கள்; விசால் காலத்தைக் கடந்து இங்கே வாழ்ந்தார்கள்; தெற்கிலிருந்து எதிர்ப்பை ஏற்படுத்தினார்கள். தெற்குத் தான் இந்த விடயத்திலும், மத்தியின் சுரண்டலை உக்கிரமாக எதிர்த்தது. மத்தியில் அதன் தொழிற்துறைகளிலும் வர்த்தகத்திலும் வாணிகத்திலும் அதிகாரத் தலங்களிலும் ஆதிக்கம் புரிந்தவர்கள் யார்? — அந்நியர்கள் அல்லது அந்நிய கலாசார மோகம் கொண்டவர்கள்.

எமது சமுதாய வரலாறு திரும்ப ஆராயப்பட்டு திரும்ப எழுதப்பட வேண்டும். முனிதாச குமாரதுங்க, பியதாச சிறிசேன, அநகாரிக தர்மபால ஆகியோர் மீண்டும் பிறப்பதற்கு நாம் காத்திருக்க வேண்டும்.

[illegible] எழுதியுள்ளார். (ஓ-க)

சண்டிலிப்பாய் வட்டம்:

## தேசிய பாதுகாப்பு நிதி கலந்துரையாடல்கள்

யாழ்ப்பாணம் ஒக். 15

சண்டிலிப்பாய் வட்டத்தைச் சேர்ந்த பின்வரும் கிராம சேவகர் பிரிவுகளில் தேசிய பாதுகாப்பு நிதிக்கு ஒப்புதல் அளிக்காதவர்களுக்கும்—

இந்தப் பகுதிகளில் இடம்பெயர்ந்து வந்து வசிக்கும் சண்டிலிப்பாய் வட்டத்தின் ஏனைய பகுதிகளைச் சேர்ந்தவர்களுக்குமான தேசிய பாதுகாப்பு நிதி தொடர்பான கலந்துரையாடல்கள் நாளை திங்கட்கிழமையும் நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமையும் நடைபெறவுள்ளன.

சுதுமலை வடக்கு, சுதுமலை தெற்கு ஆகிய கிராம சேவகர் பிரிவுகளைச் சேர்ந்தோருக்கான கலந்துரையாடல், மூளாமலை சந்தி தேசிய பாதுகாப்பு நிதி தொடர்பகத்தில் காலை8-30 மணி முதல் மாலை 5 மணி வரையும்—

மானிப்பாய் வடக்கு மற்றும் கிழக்கு கிராம சேவையாளர் பிரிவுகளைச் சேர்ந்தோருக்கான கலந்துரையாடல் மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலையில் காலை 8-30 மணி முதல் மாலை 5 மணி வரையும் நடைபெறும். [எ]

## பாணைச் சாப்பிட...

(3 ஆம் பக்கத் தொடர்ச்சி)

சந்திரிகா சமீபத்தில் கூறியுள்ளார்.

பாண் என்பது பெரும்பாலும் நகர மக்களின் அல்லது ஆணும் பெண்ணும் அலுவலக மற்றும் வேலை பார்க்கும் குடும்பங்களின் உணவு என்பது உண்மையே.

யுத்தத்தால் பாதிக்கப்பட்டு இடம்பெயர்ந்து அகதிகளாகவும் அகதி முகாம்களிலும் வாழும் தமிழீழ மக்களும் பாண் உணவுக்குப் பழக்கப்பட்டிருக்கிறார்கள்.

பாண் உணவு வசதியானது என்பதிலும் பார்க்க மலிவானது என்பதாலேயே அவர்கள் அதில் பெரும் நாட்டத்துடன் இருக்கிறார்கள்.

மாப் பற்றாக்குறை, மாவிலை உயர்வு ஆகியவற்றால் தற்போதைய நிலைமையில் சிங்கள மக்களைப் போலவே தமிழீழ மக்களும் பாதிக்கப்படுவார்கள்.

தமிழீழ மக்களும் பாணும்

எமது நாட்டு மக்கள் மீது முன்னர் திணிக்கப்பட்ட "அமெரிக்கன் கோதம்பை மா" எங்களை ஆட்டிப்படைக்கிறது. ''பசை மா'' என்றே எங்கள் முதியோர் இதனை வர்ணித்தார்கள்.

ஆனால் நாமோ பாண், மா இல்லை என்றால் சாப்பாடே இல்லை என்ற எல்லைக்கு எம்மைக் கொண்டு வந்து விட்டோம்.

நாம் தொடர்ந்து இந்த ''வெள்ளை மா''வில் நம்பி இருப்பதா என்ற கேள்வி இன்று வேறு எப்போதும் இல்லாதவாறு பெரிதாக எழுந்து நிற்கிறது.

பாணைப் போன்ற வசதியான, விலை குறைவான மாற்று உணவுகளை நாம் கண்டுபிடித்தேயாக வேண்டும்.

உள்ளூர்ப் பொருள்களான குரக்கன், தினை முதலியவற்றைக் கொண்டு பாண் அல்லது அதை ஒத்த உணவுப் பொருள்களைத் தயாரிக்கும் வழிவகைகளை நாம் விரைவில் ஆராய்ந்து அறிமுகம் செய்ய வேண்டும்.

இத்தகைய முயற்சியால் எமது உணவுப் பிரச்சினை தீர்வதுடன் பொருளாதார அபிவிருத்தியும் ஏற்படும். ★

## 4-ம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னை மடியில்: 17 — 08 — 1953



அம்பாள் அடியில்: 29 — 10 — 1991

### அமரர் ஆறுமுகம் குகதாசன்
(சிவம்)

**திதி: 5 — 10 — 1995**

பத்தமேனியை பிறப்பிடமாகக் கொண்டவரும், மிருசுவில் கண்ணகை அம்மன் கோவிலில் அமரத்துவம் அடைந்த வருமான ஆ. குகதாசன்
நண்பா உயிரிலும் மேலானது நட்பு

உன் பிரிவால் துயர் உற்று அல்லற்படும்:

பப்பா, அம்மா, பிள்ளைகள்,
குடும்ப நண்பன் சந்திரதேவா குடும்பம்,
சகோதரங்கள், மருமக்கள்,
சாரதி தாத்தா உற்றார், உறவினர்.

ஆ. ஆறுமுகம்,
பழைய வாய்க்கால்,
மிருசுவில்.

(38016)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
229/2 நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

## புதிய மொந்தையில் பழைய கள்!

யாழ்ப்பாணத்தில் இராணுவம் பாரிய தாக்குதல் ஒன்றை நடத்த உத்தேசித்திருப்பது குறித்து நான் பெரிதும் கவலை கொண்டுள்ளேன்.

யாழ்ப்பாண மக்களுக்குத் தேவையான உணவுப் பொருள்களை அரசு உடனடியாக வழங்க வேண்டும்.

இவ்வாறு தெரிவித்திருப்பவர் ஸ்ரீலங்கா நாடாளுமன்றத்தின் எதிர்க்கட்சித் தலைவரான திரு. ரணில் விக்கிரமசிங்கா. தெற்கின் பிரதானசிங்கள அரசியல் கட்சிகள் இரண்டில் ஒன்றான ஐக்கியதேசியக் கட்சியின் தலைவரும் இவரே.

ஐக்கிய தேசியக் கட்சி இடைவெளி இன்றி, ஒரே தொடர்ச்சியாக பதினேழு வருடங்கள் இந்த நாட்டை ஆட்சி செய்தது. மூன்று தலைவர்கள் மாறி மாறி சிம்மாசனத்தில் வீற்றிருந்தார்கள்.

தமிழர்களுக்கும் பிரச்சினைகள் உண்டு; அவை தீர்க்கப்பட வேண்டும் என்று தேர்தல் விஞ்ஞாபனத்தில் கூறிக்கொண்டு பதவிக்கு வந்த ஜே. ஆர். ஜெயவர்த்தனா, தமிழர் பிரச்சினையை முழுக்க முழுக்க இராணுவமயப்படுத்தினார்.

பிரேமதாசா, விஜேதுங்கா காலங்களில் பிரச்சினை மேலும் மோசமடைந்து பூதாகாரமாயிற்று. இம் மூவரின் அரசுகளிலும் ரணில் விக்கிரமசிங்கா அமைச்சராகவும், பிரதமராகவும் பதவி வகித்தவர் என்பதனை மறந்துவிடுவதற்கில்லை.

இப்போது எதிர்க்கட்சித் தலைவராக இருப்பதால், அந்தப் பதவிக்குரிய தோரணையில் — எதிர்க்கட்சி என்றால் அரசாங்கக் கட்சியின் நடவடிக்கைகளை கண்டிக்க வேண்டும் என்ற நிலையில் — நின்று இக் கருத்துக்களை வெளியிட்டாரா? அல்லது —

தமிழ் மக்கள் மீதுள்ள கரிசனையுடன் — எதிர்காலத்தில் தமிழர்களின் வாக்கு வங்கியை மனதில் வைத்து — இக்கருத்துக்களை வெளியிட்டாரா?– என்ற கேள்வி இயல்பாகவே எழும்.

பழைய தலைமைகளுக்கும் — வயது முதிர்ந்தவர்களின் தலைமைகளுக்கும் — தமது தலைமைக்கும் இடையில் வித்தியாசம் உண்டு என்று ரணில் இன்னும் நிரூபிக்கவில்லை.

சந்திரிகா குமாரதுங்காவும், ரணில் விக்கிரமசிங்காவும் சிங்களச் ஸ்ரீலங்காவின் இளந் தலைமுறைத் தலைவர்கள்.

ஆயினும் அவர்கள் சந்ததி மாற்றத்தின் தன்மையை பிரதிபலிப்பவர்களாக இல்லை. தமிழர்களை, சம அந்தஸ்துள்ள, சம உரிமைகள் உடைய, தன்னாட்சி உரிமையுள்ள ஒரு தேசிய இனம் என்பதனை அங்கீகரிக்க அவர்கள் முன்வருவதாக இல்லை. தமிழர்களுக்கென தாயகம் ஒன்று உண்டு என்பதனையும் இருவரும் ஏற்பவர்களாக இல்லை.

ஆகவே இவர்களும் தமது முந்திய சந்ததித் தலைவர்கள் போல சிங்களவர்களின் நலன்களில் மட்டுமே அக்கறையுள்ள தலைவர்களாக இருக்கப் போகிறார்கள்.

புதிய உலகப் போக்குகளையும், அரசியல் வளர்ச்சியையும், அதன் பரந்த தன்மையையும் உணர்ந்து, உள்வாங்கிச் செயற்படும் புதிய நோக்குக் கொண்ட தலைவர்களாக இவர்கள் கடந்த ஒரு வருட காலத்திலும் நிரூபிக்கவில்லை. ஆகவே இவர்கள் இருவரும் புதிய மொந்தைகளில் ஊற்றப்பட்ட பழைய கள்ளே!

# புலிகளை ஒதுக்கிவிட்டு பிரச்சினைக்குத் தீர்வுகாண முயன்றது அரசின் சூழ்ச்சியும், சதித்திட்டமுமே

> "இலங்கையில் போர் முனையில் அமைதிக் குண்டுகள்" என்ற தலைப்பில் நேற்று வெரித்தாஸ் வானொலியில் வெளிவந்த "உண்மையின் எண்ணங்கள்"

ஜனாதிபதி சந்திரிகா ஆட்சி பீடம் ஏறி ஒருவருடம் முடிவடைந்துவிட்டது.

சமாதான வழி முறையில் தமிழரின் இனப் பிரச்சினையைத் தீர்த்து வைப்பார் என்ற தமிழ் மக்களின் நம்பிக்கையும் கானலாவதியாகிவிட்டது.

அரசியல் தீர்வில் தொடங்கிய அரசு வாலைக் கட்டி, வயிற்றைக்கட்டி, தேசத்தேய உடம்பைக் கட்டி என்றாற்போல் போரைத் தொடங்க பல காரணங்கள் உண்டு.

இரண்டு தேர்தல்களிலும் சந்திரிகாவின் கட்சி வழங்கிய தேர்தல் வாக்குறுதி எதையும் அரசாங்கம் நிறைவேற்றும் நோக்கில் இல்லை என்பதே எதிர்க்கட்சியான ஐக்கியதேசியக் கட்சியின் முக்கியமான குற்றச்சாட்டு.

ஜனாதிபதி ஆட்சி முறை ஒழிக்கப்பட இல்லையே என ஜே. வி. பி.யினர் அரசாங்கத்திற்கு எதிரான நடவடிக்கையில் தீவிரம் காட்டுகின்றனர். இது மட்டுமா? ஆளும் கட்சிக்குள் எழுந்துள்ள மனக்கசப்பும் முரண்பாடுகளும் அரசுக்கு அழுத்தத்தை தந்துள்ளது.

சமாதான தீர்வும் கைவிடப்பட்ட நிலையில் அம்மையாரின் அரசு போர் முனையில் தாவியது.

விடுதலைப் புலிகளுடனான சமாதானப் பேச்சுக் காலத்திலேயே தனது அரசு போர் தயாரிப்புகளில் ஈடுபட்டிருந்தது என்று சந்திரிகா வெளியிட்ட அறிவிப்பு புலிகளை ஒதுக்கிவிட்டு இனப் பிரச்சினைக்கு தீர்வு காண முனைந்தது எல்லாம் அரசின் சூழ்ச்சியையும் சதித் திட்டங்களையுமே அம்பலப்படுத்தின.

காலுக்கு ஆக்கிய செருப்பு தலைக்கு ஆகுமா அதாது அது மாதிரி விடுதலைப்புலிகளுடனான போரில் தமிழ்மக்கள் படுகொலை செய்யப்படுவதால் சர்வதேசக் கருத்து தனக்கு எதிராக திரும்புவதை தடுக்கும் நோக்கில் அதிகாரப் பகிர்வோடு திட்டப் பிரிந்துரையையும் முன்வைத்தார்.

இதனால் தான் அரசியல் தீர்விலும் அக்கறை காட்டுவதாகவும் அதற்கு எதிராகவுள்ள விடுதலைப்புலிகளையே தான் அழித்து ஒழிக்க போர் நடத்திக் கொண்டிருப்பதாகவும் வெளி உலகுக்கு நம்பிக்கை ஏற்படவைப்பதற்கான முயற்சிகளை தொடங்கியுள்ளார்.

### சரணாகதியா? படுகொலைக்கு உள்ளாவதா?

சுமார் 20 ஆயிரம்இலங்கைத் துருப்புகள் யாழ் குடாநாட்டில் தனித்து விடப்பட்டுள்ள நிலையில் சரணடைவதா அல்லது மோசமான கொலைக்கு இலக்காவதா என்பதை தீர்மானிக்க வேண்டிய நிர்ப்பந்தம் எழுந்த போது இராணுவம் புலிகளுக்கு எதிரான பாரிய தாக்குதலை தொடங்கியது.

இத் தாக்குதலில் எதிர்பாராத வகையில் போராளிகள் தரப்பில் கூடுதலான இழப்பு ஏற்பட்டது. இராணுவத்தினர் புலிகளைவிட குறைவாக உயிரிழந்ததால் இத் தாக்குதல் இராணுவத்திற்கு ஒரு பெரும் வெற்றி என்று கூறிவிடமுடியாது.

இந்த நீண்ட போரானது வடக்கில் ஒரு பெரும் திருப்பு முனையை ஏற்படுத்தி விட்டது என்றும் கூறிவிட முடியாது.

ஒரு முறை வெற்றி பெறுவதாலோ அல்லது தோல்வி அடைவதாலோ நாட்டின் இராணுவ சூழ்நிலைகளை தீர்க்கமாக கூறிவிட முடியாது.

போராளிகள் பலத்த இழப்பை சந்தித்தாலும் விடுதலைப்புலிகளின் பலத்தை குறைத்து மதிப்பிட முடியாது என ஆசிய அயலுறவு அதிகாரி ஒருவர் கருத்துக் கூறியுள்ளார்.

போராளிகளுடன் நடக்கும் தாக்குதலின் முடிவு எப்படியிருக்குமோ என்ற அச்சத்தில் தான் என்னவோ உள்நாட்டு பத்திரிகைகள் மீது தணிக்கை தடை உத்தரவை அரசு பிரகடனப்படுத்தியது.

சுதந்திர ஜனநாயக நாட்டில் பேச்சு உரிமை கிடையாது என்பதையே இது காட்டுகிறது. (போரை எப்படி நிறுத்தலாம் என்பதைவிட போராளிகளை எவ்வாறு ஒடுக்கலாம் என்பதே முக்கிய குறிக்கோளாக மாறியதால் வெளிநாடுகளில் இருந்து செயல்படும் போராளிகளின் அலுவலகங்களுக்கு அயல் நாடுகள் தடைவிதிக்க வேண்டுமென்று அரசு கேட்டுக் கொண்டது.

அதற்கு எங்கள் வீட்டு சமாச்சாரத்தில் நீங்கள் தலையிட வேண்டாம். என்று

[8 ஆம் பக்கம் பார்க்க]

## யாழ். மக்களின் அவல நிலையை ...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

★ யாழ்ப்பாணத்துக்கான தபால் மற்றும் தொலைத்தொடர்பு சேவைகள் தடுக்கப்பட்டிருப்பதாலும் —

இப்பிரதேச மக்கள் அனுபவிக்கும் சொல்லொணா துன்ப துயரங்களை, ஸ்ரீலங்கா ஜனாதிபதியின் கவனத்துக்குக் கொண்டுவருவதற்காக, யாழ்ப்பாணத்தில் முற்றுகைக்கு உள்ளாகியிருக்கும் சுமார் பத்து லட்சம் மக்களின் சார்பில் ஜனாதிபதிக்கு யாழ்ப்பாணம் பிரஜைகள் குழு பல கடிதங்களை எழுதியுள்ளது.

எமது கடைசிக் கடிதங்கள் சில 1991 ஜூலை 31, ஓகஸ்ட் 4, ஓகஸ்ட் 22, செப்டெம்பர் 18 ஆகிய திகதியிடப்பட்டிருந்தன.

அவை கிடைத்தன என்ற நாகரிகமான பதிலாவது எமக்கு ஜனாதிபதியிடமிருந்து கிடைக்கவில்லை! யாழ் குடாநாட்டில் நீண்டகாலம் துன்பம் அனுபவித்து வரும் மக்களுக்கு நிவாரணமளிப்பதற்குரிய அர்த்தமுள்ள நடவடிக்கைகளும் அரசினால் எடுக்கப்படவில்லை.

இதற்கு மாறாக—

பெரும் எண்ணிக்கையான பொதுமக்களின் உயிர்களைக் குடித்த — மிக மோசமான "முன்னேறிப் பாய்தல்" நடவடிக்கையின் பின்னரும், பெண்கள், குழந்தைகள் உட்பட கொல்லப்படும் பொதுமக்களின் எண்ணிக்கை குறையாமல் அதிகரித்து வருகின்றது

### இடிமுழக்க கைகுலு கல் தாக்குதல்கள்

பல மாணவர்கள் கொல்லப்பட்ட — நகர் கோயில் மத்திய பாடசாலை நேர் முன்றில் மீதான குண்டு வீச்சு—

"இடிமுழக்க தாக்குதல்" என்ற பெயரில் தற்போது மேற்கொள்ளப்படும் இராணுவ நடவடிக்கை —

போன்ற முக்கியமாக பழிகூறத்தக்க — அதிர்ச்சியூட்டுகின்ற — முழு நாகரிக உலகினாலும் கண்டிக்கத்தக்க — சம்பவங்கள் உட்பட பின்வரும் சம்பவங்களை நாங்கள் குறிப்பிட்டுக்காட்ட விரும்புகிறோம்.

(i) "கை குலுக்கல்" இராணுவ நடவடிக்கையின் போதும் அதன் பின் தொடர்ந்து பல நாட்களும் ஏழாலை, சுன்னாகம், மல்லாகம், உரும்பராய், ஊரெழு, புன்னாலைக்கட்டுவன் போன்ற மக்கள் செறிந்து வாழும் பகுதிகள் மீது நடத்தப்பட்ட கண்மூடித்தனமான — தொடர் — ஷெல் தாக்குதல்களின் விளைவாக 19 பேர் உயிரிழந்தனர்; 63 பேர் காயமுற்றனர்; பொதுமக்களின் ஏராளமான சொத்துக்கள் சேதமாக்கப்பட்டன. ஷெல் தாக்குதல்களினாலும் அதன் பின்னர் இவற்றில் சில பகுதிகளில் இடம் பெற்ற இராணுவ ஆக்கிரமிப்பினாலும் 7 ஆயிரம் குடும்பங்கள் இடம் பெயரும் நிலைக்குத் தள்ளப்பட்டன.

(ii) செப்டெம்பர் 16 ஆம் திகதி முதல் பருத்தித்துறை, கரவெட்டி, மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளை நோக்கி பலாலி இராணுவ முகாமிலிருந்து கடும் பீரங்கி தாக்குதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அது செப்டெம்பர் 21 முதல் 23 வரை தீவிரமாக்கப்பட்டுள்ளதுடன் தற்போது தொடர்ந்து இடம்பெற்று வருகின்றது. இதனால் 20 பொதுமக்கள் உயிரிழந்தனர்; இருநூறு பொதுமக்கள் காயமுற்றனர்; 3 ஆயிரம் குடும்பங்கள் இடம் பெயர்ந்தன.

(iii) ஐநூறுக்கும் அதிகமான மாணவர்கள் வருகை தந்திருந்த நாகர்கோவில் மத்திய பாடசாலையின் நேர் முன்றில் மீது 1995 செப்டெம்பர் 22 ஆம் திகதி நண்பகல் அளவில் "புக்காரா" குண்டு வீச்சு விமானம் மூன்று குண்டுகளை வீசியது. 23 பாடசாலை மாணவர்களும் மூன்று பெற்றோர்களும் உயிரிழந்தனர். அவர்களில் 21 பேர் அந்த இடத்திலும் ஐவர் அன்றைய தினம் பின்னர் ஆஸ்பத்திரியிலும் உயிரிழந்தனர் மேலும் 35 மாணவர்கள் படுகாயமடைந்தனர். அவர்களில் 17 பேர் கை, கால்கள் துண்டிக்கப்பட்டனர். அவர்களில் பத்துப்பேர் காயங்களினால் தற்போது மாண்டுள்ளனர்.

(iv) "இடிமுழக்கத் தாக்குதல் என்ற பெயரில் வடமராட்சி, வலிகாமம் கிழக்கு, தென்மராட்சி பகுதிகள் மீது 01 - 10 - 95 அன்று ஆரம்பிக்கப்பட்ட — மிகத் தீவிரமான — இடைவிடாத — கண்மூடித்தனமான மோட்டார் ஷெல் தாக்குதல்கள் இன்னும் தொடர்ந்து இடம்பெற்று வருகின்றன.

இதனால் பல பொதுமக்கள் உயிரிழந்துள்ளனர்; பல நூற்றுக்கணக்கானோர் படுகாயமுற்றுள்ளனர்; நூற்றுக்கணக்கான வீடுகள் அவற்றில் இருந்த சொத்துக்களுடன் சேதமுற்றுள்ளன. 15 ஆயிரத்துக்கும் அதிகமான குடும்பங்கள் இடம்பெயர்ந்துள்ளன. இந்த இடம்பெயர்ந்த குடும்பங்களின் நெருக்கடி நிலை நேரில் கண்டுணரப்பட வேண்டியவை.

### ஒரே ஒரு சத்திர சிகிச்சை நிபுணர்

பாதுகாப்பு படையினர் ஏவும் ஷெல்களினால் யாழ் குடாநாடு தொடர்ந்து அதிர்ந்து கொண்டிருக்கையில் —

உயிரிழந்த மற்றும் காயமடைந்த பொதுமக்களின் சரியான எண்ணிக்கை இனித்தான் கண்டறியப்பட வேண்டியுள்ளது.

ஆனால் காயமுறும் பொதுமக்களைக் கவனிக்க ஒரேயொரு சத்திர சிகிச்சை நிபுணரை மட்டும் கொண்ட — யாழ் குடாநாட்டில் உள்ள — ஒரேயொரு பொது வைத்தியசாலையான யாழ். ஆஸ்பத்திரி நிரம்பி வழிகின்றது.

ஆனால் இதில் மிகப் பரிதாபமானது என்னவென்றால் —

தமிழரைப் பாதுகாத்தல் மற்றும் வடக்கு — கிழக்கில் சமாதானத்தைக் கொண்டு வருதல் என்ற பெயரில் இந்த அட்டூழியங்கள் புரியப்படுவதுதான்.

### அரசியல் தீர்வே அவசியம்

தமிழ் தேசியப் பிரச்சினைக்கு தேவைப்படுவது அரசியல் தீர்வே தவிர நிச்சயமாக இராணுவத் தீர்வல்ல என்பதைத்தான் ஜனாதிபதிக்கு புரிய வைப்பதற்கு நாம் மீண்டும் மீண்டும் முயற்சித்து வருகிறோம்.

இத்தகைய போர் நடவடிக்கைகள் தமிழர்களுக்கு எதிரான அரச பயங்கரவாதம் என்றே கருதப்பட முடியும் என்பதோடு, தமிழர்களின் உணர்வுகளைத் தீவிரமாக்கி இத்தகைய செயல்களைப் புரியும் குற்றவாளிகளுக்கு எதிராக போரிட வேண்டும் என்ற அவர்களின் முடிவை மேலும் உறுதிப்படுத்துவதாக அமையும்.

இந்த சாதாரண உண்மைக்கு இனப்பிரச்சினையின் சரித்திரம் முழு சாட்சியங்களைக் கொண்டுள்ளது.

அப்பாவிப் பொதுமக்களை கொன்று காயப்படுத்துகின்ற விளைவுகளை ஏற்படுத்தும் இராணுவத் தாக்குதல்கள் பயங்கரமான முறையில் அதிகரித்து வருவது —

அதனுடன் சேர்ந்து கொழும்பைத் தளமாகக் கொண்ட வெகுசன தொடர்பு சாதனங்களாலும், அரசியல்வாதிகளாலும், பௌத்தகுருமார் மற்றும் தொழில்சார் நிபுணர்களாலும் கூட போர்க்குரல் ஓங்கி ஒலிக்கப்பட்டு வருவதும் —

ஐக்கிய ஸ்ரீலங்கா ஆட்சி முறைக்குக் கீழ் இனப்பிரச்சினைக்கு ஒரு தீர்வைக் கண்டுபிடிக்கும் சாத்தியத்தை அடைத்துவிடும் என்பதே எங்களின் தீர்க்கமான கருத்தாகும்.

இந்த செய்தித்துறையினர் நம் ஏனையோரும் வடக்கு, கிழக்குச் சென்று அங்குள்ள நிலைமையை நேரில் கண்டறிந்து, தமிழர்கள் எதிர்நோக்கும் பிரச்சினை பற்றி நேரில் புரிந்து கொள்ள அனுமதியளிக்கப்படவேண்டும்.

துரதிர்ஷ்டவசமாக அரசாங்கம் அத்தகைய விஜயங்கள் இடம்பெறாமல் பார்த்துக் கொள்வதோடு, அதன் மூலம் அப்பாவிகள் படுகொலை செய்யப்படுவது மற்றும் மக்களின் துன்ப துயரங்கள் ஸ்ரீலங்காவின் ஏனைய பகுதிகளுக்கும் வெளியுலகுக்கும் கசியாமல் தடுத்து விடுகின்றது.

பொருளாதாரத் தடையை நீக்கும்படியும் —

இனப்பிரச்சினைக்கு பேச்சுவார்த்தை மூலமான அரசியல் தீர்வு காண்பது என்ற பிரகடனப்படுத்தப்பட்ட தமது மூல நிலைப்பாட்டுக்கு மீளும்படியும்—

ஸ்ரீலங்கா ஜனாதிபதி மீது அழுத்தம் பிரயோகிக்கும்படி சர்வதேச சமூகத்தின் தலைவர் என்ற வகையில் தங்களிடம் நாம் விண்ணப்பிக்கின்றோம்.

சமாதானத்துக்கான யுத்தம் என்ற தற்போதைய கொள்கை மேலும் இரத்தம் சிந்தச் செய்வதோடு மயானத்தில் உள்ள அமைதி நிலை ஒன்றுக்கே வழிவகுக்கும்— என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. [உ]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளிநாட்டு கடவுச்சீட்டு வைத்துள்ள தமிழர்கள் யாழ்ப்பாணம் வரத் தடை!

## தாண்டிக்குளத்தில் வைத்து திருப்பி அனுப்பப்பட்டனர்

கொழும்பு, ஒக். 15

வெளிநாட்டு கடவுச் சீட்டுகளை வைத்துள்ள இலங்கையில் பிறந்தவர்கள் வடபகுதிக்குச்செல்ல கூட்டுப்படை தலைமையகம் தடைவிதித்துள்ளது.

வடபகுதிக்குச் செல்ல விரும்பும் வெளிநாட்டு கடவுச்சீட்டு வைத்துள்ள இலங்கையர்கள் கூட்டுப்படை அலுவலகத்தின் முன் அனுமதி பெற வேண்டும் என்று கூட்டுப்படை தலைமை அலுவலக உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

வடபகுதியில் பிறந்து தற்போது வெளிநாடுகளில் வாழ்வதால் வெளிநாட்டு கடவுச் சீட்டுக்களை வைத்திருக்கும் தமிழர்கள் சிலர் வடக்கே செல்வதற்காக கடந்த சில வாரங்களாக முயற்சித்த போது தாண்டிக்குளத்துக்கு அப்பால் செல்ல படையினர் அனுமதி வழங்கவில்லை. அவர்கள் படையினரால் கொழும்புக்கு திருப்பி அனுப்பப்பட்டுள்ளனர்.

இது தொடர்பாக கூட்டுப்படைத் தலைமையகத்தின் உயர் அதிகாரி ஒருவருடன் தொடர்பு கொண்ட போது—

இலங்கையில் பிறந்தவர்கள் வெளிநாட்டு கடவுச் சீட்டுகளை வைத்திருந்தால் அவர்களும் வெளிநாட்டவர்களாகவே கணிக்கப்படுகின்றனர். எனவே சாதாரண சட்டத்தின் கீழ் அவர்களும் அனுமதி பெற வேண்டும் என அந்த அதிகாரி கூறியதாக கொழும்பு பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது. (ஐ)

# மரண அறிவித்தல்கள்

## திருமதி இரத்தினம்மா குலதுங்கசுந்தரம்

வண்ணார்பண்ணை, நீராவியடியைச் சேர்ந்த திருமதி இரத்தினம்மா குலதுங்கசுந்தரம் லண்டனில் சென்ற திங்கட்கிழமை (9 - 10 - 95) காலமாகிவிட்டார்.

இவர் காலஞ்சென்ற முத்துத்தம்பி – அமிர்தம்மா தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்ற வீரசிங்கம் குலதுங்கசுந்தரத்தின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற தெய்வநாயகி சோமசுந்தரம், காலஞ்சென்ற சொர்ணம்மா இராசதுரை மற்றும் தியாகராஜா (லண்டன்), மகேஸ்வரி செல்வநாயகம், மனோரஞ்சிதம் இராசையா, தனலட்சுமி சரவணமுத்து, சோதிலட்சுமி பாலசிங்கம், யோகேஸ்வரி மகேசன் ஆகியோரின் அன்புச் சகோதரியும், நாகேஸ்வரி நடராஜா (ஆஸ்திரேலியா), புவனேஸ்வரி கதிர்காமதாசன் (லண்டன்), குமாரசிங்கம், பத்மாவதி சேனாதிராசா (கனடா), திலகவதி குமரேசன், Dr. பாலசிங்கம் (லண்டன்), முத்துக்குமாரசாமி, கௌரி பத்மேஸ்வரன் (புறாணை), கமலாதேவி நாகேந்திரா (ஆஸ்திரேலியா), அமிர்தாம்பிகை குமாரசிங்கம் (ஆஸ்திரேலியா) ஆகியோரின் அன்புத் தாயாரும், கமலாதேவி, லலிதா (லண்டன்) ஆகியோரின் அன்புமாமியுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 12-10-95 இல் லண்டனில் நடைபெற்றன. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்;
திலகவதி குமரேசன்
(மகள்)

217/3 கடையிற்சுவாமி கோயில் ஒழுங்கை,
நீராவியடி,
யாழ்ப்பாணம். (39018)

## நாகனாதி விசுவலிங்கம்

புங்குடுதீவு 11 ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த நாகனாதி விசுவலிங்கம் கொழும்பில் காலமாகிவிட்டார்.

அன்னார் புங்குடுதீவு காலஞ்சென்றவர்களான நாகனாதி (நாகப்பர்) சிவகாமிப்பிள்ளை தம்பதிகளின் மகனும், பெரியதம்பி-செல்லமுத்து தம்பதிகளின் மருமகனும், செல்லம்மாவின் அன்புக் கணவரும், யோகநாயகி, அன்னலெட்சுமி, மகாலிங்கம், நடனலிங்கம், ஆகியோரின் அன்புத் தந்தையும் அமரசிங்கம், முத்துலிங்கம், ஜெகதீஸ்வரி (ராணி) ஆகியோரின் அன்பு மாமனாரும் காலஞ் சென்றவர்களான அதிபர் சோமசுந்தரம், சண்முகலிங்கம், மற்றும் அதிபர் கார்த்திகேசு, லெட்சுமிப்பிள்ளை, பரிமளம், சற்குணம் ஆகியோரின் அன்புச் சகோதரரும் காலஞ் சென்றவர்களான வைரமுத்து, நல்லையா, செல்வத்துரை நடராசா, யோகம்மா, பரமசக்தி, நாகம்மா, மற்றும் பாலசிங்கம், சிவபாக்கியம், நல்லம்மா, ஆகியோரின் அன்பு மைத்துனரும் சிவகுமார், தர்மஞானி, உதயகுமார், பிரேமகுமாரி, ஜெயகுமார், வேணுகுமார், சசிகுமாரி, அரவிந்தன், அன்பரசன், அருளானந், பிரமினா, சுகந்தா, அகிலன், கார்த்திகா, கார்த்திக் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 15-10-95 அன்று பகல் 10 மணிக்கு 98, பரமானந்த விகாரை மாவத்தை கொழும்பு. 13 இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் மாதம்பிட்டி மயானத்தில் தகனம் செய்யப்படும் இவ்வறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

தகவல்:
ந. முத்துலிங்கம்
(மருமகன்)

6/10, 2 ம் ஒழுங்கை,
பலாலி வீதி,
யாழ்ப்பாணம். (39013)

## திருமதி செல்லம்மா மார்க்கண்டு

காரைநகர் வயிரிக்கூடலைச் சேர்ந்த திருமதி செல்லம்மா மார்க்கண்டு 7 - 10 - 95 அன்று காரைநகரில் சிவபதமடைந்துவிட்டார்.

இவர் காலஞ்சென்ற வைத்திலிங்கம் மார்க்கண்டுவின் அன்பு மனைவியும், R. T. சோமசுந்தரம் (மலேசியா), R. T. ஆறுமுகம் (தங்கோடை — காரைநகர்) ஆகியோரின் அன்புச் சகோதரியும், பராசக்தி (மலேசியா), சுந்தரலிங்கம் (திருநெல்வேலி), காலஞ்சென்ற பரமேஸ்வரி ஆகியோரின் அன்புத் தாயாரும், குமாரசாமி (மலேசியா), சுந்தரம்மா (திருநெல்வேலி) ஆகியோரின் அன்பு மாமியாரும், ரவீந்திரன், ரவிசங்கர், கலா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார். அன்னாரின் இறுதிக் கிரியைகள் காரைநகரில் நடைபெற்றன.

துக்க நிகழ்வு இன்று (15 - 10 - 95) ஞாயிற்றுக்கிழமை கரியப்புலம் வைரவர் கோயில், திருநெல்வேலிச் சந்திக்கருகில் உள்ள அன்னாரின் புதல்வர் மா. சுந்தரலிங்கத்தின் இல்லத்தில் நடைபெறும்.

உற்றார், உறவினர், நண்பர்கள் இவ்வறிவித்தலை ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
மா. சுந்தரலிங்கம்
(மகன்)

(39008)

### புலிகளை----

(7 ஆம் பக்கத் தொடர்ச்சி)

'மூஞ்சை' யில் கரி பூசினால் போல் லண்டன், பாரிஸ், போன்ற நகரங்களில் இருந்து பதில் கிடைத்திருக்கிறது.

எம் நாட்டு சட்டங்களுக்கு ஏற்ப விடுதலைப் புலிகள் நடந்து கொள்கிறார்கள். அவர்களது அலுவலகங்களை மூடமுடியாது என்று அவர்கள் கூறிவிட்டனர்.

போராளிகளை ஒடுக்குவதாக கூறிக்கொண்டு யாழ்ப்பாணம் மீது எந்நேரமும் அடுத்த கட்ட பெரும்போர் ஆரம்பமாகலாம் என்ற சூழ்நிலை உள்ளது. நெருப்பிலே நெய்விட்டது போல் பொது மக்கள் நொந்து போயுள்ளனர்.

இது மட்டுமா வடக்கில் உணவு மற்றும் மருந்துப் பற்றாக்குறை மிகவும் மோசமான நிலையில் உள்ளது. என அரசுக்கு எதிரான போராளிகள் மட்டும் கூறவில்லை அரசாங்க அதிபர் கூறுகிறார்.

செஞ்சிலுவைச் சங்கம் கூறுகிறது, எதிர்க் கட்சி கூறுகிறது.

மக்கள் பட்டினிச் சாவைச் சந்திப்பர். அம்மி குத்தினாலும் பொம்மை குத்தினாலும் வேண்டியது அரிசி ஆனால் அவர்களுக்கு கிடைப்பதோ அதிர்ச்சி.

செஞ்சிலுவைச் சங்கம் விடுதலைப் புலிகளுக்கு ஆதரவு காட்டுவதாகக் கூறி அதனை நாட்டை விட்டு வெளியேற்ற ஒரு சில முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. ஏனென்றால் அவர்கள்மூலம் உண்மை புலனாகிவிடுமே.

அரசியல் தீர்வு அமைதியை எப்படிக் கொண்டுவரும் எனக்கேட்ட எதிர்க் கட்சியினருக்கு பதில் போர்என அரசு மறைமுகமாகக் கூறி வருகிறது. (இ-4)

### படையினர்---

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

சம்பவம் இடம்பெற்றது.

சாகீப் நகரிலுள்ள இரத்தின பிள்ளை வடிவேலு என்பவரது தோட்டத்தில் மாம்பழம் எடுக்கச் சென்ற அவரது மகனே காயமடைந்தவர் ஆவார். (இ-4)

### டாக்டர்கள்---

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

டாக்டர் லலித் சந்திரதாஸ செயலாளர் பதவியை ராஜினாமாச் செய்துள்ளார்.

எனினும் திட்டமிட்டவாறு வேலை நிறுத்தப் போராட்டம் நடைபெறும் என்று சங்கத்தின் பேச்சாளர் ஒருவர் அறிவித்துள்ளார்.

மருந்து விநியோக பதில் பணிப்பாளர் டாக்டர் அஜித் மெண்டிஸின் இடமாற்றத்தை ஆட்சேபித்தே டாக்டர்கள் வேலைநிறுத்தம் செய்யவுள்ளனர்.

டாக்டர்களின் வேலை நிறுத்த அச்சுறுத்தலை எதிர்கொள்ளத் தாம் தயார் என்று சுகாதார அமைச்சர் ஏ. எச். எம். பௌஸி தெரிவித்துள்ளார். (ஐ-6)

## ஜீவன் பாலர் பாடசாலை ஆண்டுவிழா

யாழ்ப்பாணம், ஒக். 15

தமிழீழ விடுதலைப் புலிகள் மகளிர் அமைப்பு சமூக மேம்பாட்டுப் பிரிவின் கீழ் இயங்கும் ''ஜீவன்'' பாலர் பாடசாலையின் 4 ஆம் ஆண்டு விளையாட்டு விழா இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2. 30 மணி முதல் கோண்டாவில் ஞானவீர சனசமூக நிலைய விளையாட்டு மைதானத்தில் நடைபெறும்.

ஞானவீர சனசமூக நிலைய தலைவர் திரு. க. ம. இராஜேந்திரன் தலைமையில் நடைபெறும் இவ்விளையாட்டு விழாவுக்கு பிரதம விருந்தினராக கோண்டாவில் சி. சி. த. க. பாடசாலை அதிபர் திரு. இ. சிவபாதசேகரம் கலந்துகொள்கிறார். (இ-4)

# மரண அறிவித்தல்

## திருமதி கண்மணி அப்பாத்துரை

பொன்னையா ஒழுங்கை, வண். வடமேற்கு ஆனைக்கோட்டையைப் பிறப்பிடமாகக் கொண்ட திருமதி கண்மணி அப்பாத்துரை நேற்று சிவபதமடைந்துவிட்டார்.

இவர் காலஞ்சென்ற சி. அப்பாத்துரையின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற திருநாவுக்கரசு, மற்றும் பராசக்தி ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற சிவஞானம் (சிங்கப்பூர்), மற்றும் முருகையா, சண்முகலிங்கம், குமாரவேலு (யாழ்ப்பாணக் கல்லூரி ஆசிரியர்), பாலபாஸ்கரன் (கணக்காளர்), மனோரஞ்சிதம், தனலக்சுமி (இத்தாலி), தங்கலட்சுமி, இராஜேஸ்வரி ஆகியோரின் அன்புத் தாயாரும் காலஞ்சென்ற சதாசிவம், மற்றும் ஞானம்மா, நவரத்தினம் (இத்தாலி), சங்கரலிங்கம் (கொழும்பு), திருமகள், சுமதி, பாக்கியநாதன் ஆகியோரின் அன்பு மாமியாரும், செல்வேந்திரன் (சிங்கப்பூர்), இராஜினிதேவி, உதயசூரியன் (மாலைதீவு), உதயகுமார் (இத்தாலி), கிருஷ்ணகுமார் (இத்தாலி), இரட்ணகுமார் (ஜேர்மன்), உதயரஞ்சினி (பிரான்ஸ்), வசந்தினி, சுதர்விழி (கனடா), சுதர்சன், சாந்தி, உமா, அகிலன், யாழினி, குமரன், வாணி, கார்த்திகா, ரமணன், தீர்த்தனா, லோகேந்திரன் (சவுதி), சிறிதரன், திருக்குமார் (கனடா), கிருபாகரன் (பிரான்ஸ்), நாகேஸ்வரன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், ஜனார்த்தனி தனுஷா (கனடா), கஜலக்ஷி, சங்கீதா, சாலினி (சிங்கப்பூர்), நிரோஷன் (இத்தாலி) ஆகியோரின் அன்புப் பூட்டியும், திருநாவுக்கரசுவின் (ஓய்வுபெற்ற தலைமையாசிரியர்) மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இறுதிக்கிரியையின் பின்னர் இன்று (15-10-95) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு கோம்பயன்மணல் மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
அ. குமாரவேலு
(மகன்)

பொன்னையா ஒழுங்கை,
ஆனைக்கோட்டை. (39021)


போலியோ-...

- அது பொல்லாத வியாதி

உங்கள் குழந்தைகளுக்கு அந்த வியாதி வராமல் தடுக்க வழியுண்டு,

நவம்பர் 4 ஆம் திகதியை நினைவில் வைத்திருங்கள்


இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2 இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 15 - 10 - 95 இல் அச்சிட்டு வெளியிடப் பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org